இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 143 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 17 – செவ்வாய்க்கிழமை 02 ஜனவரி 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 143: Thiruvalluvar Year - 2054 - Margazhi 17 - Tuesday 02 January 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00


## நமது ‘திராவிட மாடல்’ அரசின் வெற்றிப் பயணம்

# வரும் புத்தாண்டில் புதிய சாதனை உச்சங்களைத் தொடும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் - 2024 ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஜன. 2 -**

**தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், 2024 ஆங்கிலப் புத்தாண்டையொட்டி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், “நமது ‘திராவிட மாடல்’ அரசின் வெற்றிப் பயணம், வரும் புத்தாண்டில் புதிய சாதனை உச்சங்களைத் தொடும்” எனக் குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் – 2024 ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி வருமாறு:–

புதிய சிந்தனை, புதிய இலக்குகளுக்கான வாசலைத் திறந்து வைத்து நம்பிக்கையின் ஒளிக்கதிர்களுடன் பிறக்கிறது இனிய புத்தாண்டு!

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், சமத்துவம், சகோதரத்துவம், சமூக நீதிக்கான பயணத்தில் எத்தனை தடைகள் எதிர்பட்டாலும் அவற்றைத் தகர்த்தெறிந்து முன்னேறும் நமது திராவிடமாடல் அரசின் வெற்றிப் பயணம், வரும் புத்தாண்டில் புதிய சாதனை உச்சங்களைத் தொடும்.



அதற்கான நம்பிக்கையும் உறுதியும் புத்தாண்டில் நிறைந்துள்ளது.

”எல்லார்க்கும் எல்லாம் என்ற நமது இலட்சியம் நிறைவேறும் நிறைவான ஆண்டாக இந்தப் புத்தாண்டு அமையட்டும்!

அனைவருக்கும் எனது இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## தமிழ்நாட்டில் 6-ஆம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்பு

சென்னை, ஜன.2-

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாட்டில் மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளது என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் உருவாகிய காற்றழுத்த தாழ்வு பகுதி அதே பகுதிகளில் நிலவுகிறது.

இது அடுத்த 24 மணி நேரத்தில் மேற்குவடமேற்கு திசையில் நகர்ந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக தெற்கு அரபிக்கடலின் மத்திய பகுதிகளில் நிலவக்கூடும்.

இதனால் நேற்று தமிழ்நாட்டில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்தது.

தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் லேசான பனி மூட்டத்திற்கு வாய்ப்புள்ளது. நீலகிரி மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் இரவு நேரங்களில் ஓரிரு இடங்களில் உறை பனிக்கு வாய்ப்புள்ளது.

இன்று முதல் 6-ஆம் தேதி வரை தமிழ்நாட்டில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் லேசான பனி மூட்டத்திற்கு வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில்லேசான பனிமூட்டத்திற்கு வாய்ப்புள்ளது.

அதிகபட்ச வெப்பநிலை 31 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 21-22 டிகிரி செல்சியஸாகவும் இருக்கக் கூடும்.

---

### முதல் நாளிலேயே பரபரப்பாகக் காட்சியளித்த கிளாம்பாக்கம் பேருந்து முனையம்!

## “விமான நிலையம்போல் உள்ளது கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்” என பொதுமக்கள் மகிழ்ச்சி!

### விழாக் காலங்களில் போக்குவரத்து நெரிசலின்றி மக்கள் எளிதாக தென் மாவட்டங்களுக்குப் பயணம்!

செங்கல்பட்டு, ஜன.2-

கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் இருந்து அரசு விரைவு பேருந்துகள் இயக்கம் முழுமையாக தொடங்கியுள்ளது. கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை விமான நிலையம் போல தமிழ்நாடு அரசு உருவாக்கியிருப்பதாக பொது மக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

சென்னையை அடுத்துள்ள கிளாம்பாக்கத்தில் 88.52 ஏக்கர் பரப்பளவில் 393 கோடியே 74 லட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சனிக்கிழமை திறந்து வைத்தார்.

வெளியூர் செல்லும் SETC எனப்படும் அரசு விரைவு போக்குவரத்து கழகப் பேருந்துகள், கிளாம்பாக்கத்தில்இருந்து நேற்று முன்தினம் முதல் முழுமையாக இயக்கப்பட்டு வருகின்றன.

முழுமையாக பயன்பாட்டுக்கு வந்த முதல் நாளிலேயே கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் பரபரப்பாக காட்சியளிக்கிறது. கிளாம்பாக்கம் பேருந்து முனையம் மூலம், தென்மாவட்டங்களுக்குச் செல்லும் போது பயண நேரம் குறையும் என்றும், விழாக்காலங்களில் போக்குவரத்து நெரிசலின்றி எளிதாக பயணிக்க முடியும் என்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை விமான நிலையம் போல தமிழ்நாடு அரசு உருவாக்கியிருப்பதாகவும் பொதுமக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, அரசு விரைவு போக்குவரத்து கழகமான SETC பேருந்துகள் இனி கிளாம்பாக்கத்திலிருந்துதான் இயக்கப்படும் என்றும் கோயம்பேட்டில் இருந்து SETC பேருந்துகள் இயக்கப்படாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(GFX IN) சென்னையில் இருந்து வெளி மாவட்டங்கள் மற்றும் வெளியூர் செல்லும் மற்றும் வெளியூர்களில் இருந்து சென்னை வரும் SETC விரைவு பேருந்துகள் அனைத்தும் கிளா ம்பாக்கத்தில் இருந்துதான், இயக்கப்படும்.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, திருச்சி, மதுரை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், சிவகங்கை, காரைக்குடி, புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு செல்லும் விரைவு பேருந்துகள் கிளாம்பாக்கத்தில் இருந்து செல்லும். தஞ்சாவூர், திருவாரூர், கும்பகோணம், வேளாங்கண்ணி ஆகிய டெல்டா பகுதிகள், தருமபுரி, ஒசூர் ஆகிய இடங்களுக்கான விரைவு பேருந்துகளும் கிளாம்பாக்கத்திலிருந்தே புறப்படும்.

மேற்கு மாவட்டங்களான சேலம், நாமக்கல், கரூர், ஈரோடு, திருப்பூர், கோவை ஆகிய ஊர்களுக்கும் கொடைக்கானல், எர்ணாகுளம், திருப்பதி ஆகிய இடங்களுக்கும் கிளாம்பாக்கத்தில் இருந்துதான் விரைவு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. TNSTC எனப்படும் 6 போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் பொங்கல் பண்டிகை வரை கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படும்.

காஞ்சிபுரம், ஆரணி, ஆற்காடு, செய்யாறு, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, ஒசூர், சேலம், திருப்பதி, நெல்லூர் ஆகிய ஊர்களுக்கான TNSTC பேருந்துகள் கோயம்பேட்டிலிருந்து புறப்படும். திண்டிவனம், செஞ்சி, வந்தவாசி, திருவண்ணாமலை, போளூர், சேத்பட்டு ஆகிய ஊர்களுக்கும் விழுப்புரம், கடலூர், சிதம்பரம், காட்டுமன்னார்கோயில், நெய்வேலி, கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களுக்கும் செல்லும் TNSTC பேருந்துகள் மற்றும் இசிஆர் வழியாக பண்ருட்டி, வடலூர், தஞ்சை, கும்பகோணம் ஆகிய ஊர்களுக்கு செல்லும் பேருந்துகளும் பொங்கல் வரை கோயம்பேட்டிலிருந்து இயக்கப்படும். அதன்பிறகு கிளாம்பாக்கத்திலிருந்து இயக்கப்படும்.

கிளாம்பாக்கத்திலிருந்து ஆம்னி பேருந்துகளின் சேவையும் தொடங்கியுள்ளது. இருப்பினும், ஏற்கனவே முன்பதிவு செய்த பயணிகளின் வசதிக்காக பொங்கல் வரை கோயம்பேட்டிலிருந்து ஆம்னி பேருந்துகளை இயக்கிக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதன்பின் கிளாம்பாக்கத்திலிருந்து மட்டுமே ஆம்னி பேருந்துகளை இயக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், சென்னை நகரின் பல்வேறு இடங்களிலிருந்து கிளாம்பாக்கம் செல்லவும், கிளாம்பாக்கத்திலிருந்து சென்னை நகருக்குள் வரவும், கோயம்பேடு, பிராட்வே, தாம்பரம், கிண்டி, திருவான்மியூர், பூவிருந்தவல்லி, தியாகராய நகர் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு அதிக அளவில் மாநகரப் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

---

### முதல்வர் மு.க.ஸ்டாலின் விழாவில் பங்கேற்கிறார்!

## திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தில் புதிய முனையம்!

### பிரதமர் மோடி இன்று திறந்து வைக்கிறார்!





**திருச்சி, ஜன.2-**

**திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தில் புதிய முனையத்தை பிரதமர் மோடி அவர்கள் இன்று (ஜன.2) திறந்து வைத்து உரையாற்றுகிறார்.**

**இவ்விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று உரையாற்றுகிறார்.**

திருச்சி சர்வதேச விமான நிலையத்தை தரம் உயர்த்தி புதிய விமான நிலைய முனையம் கட்ட இந்திய விமான நிலைய ஆணைய குழுமம் ரூ.951 கோடி ஒதுக்கீடு செய்தது.

இதனை தொடர்ந்து கடந்த 2019–ஆம் ஆண்டு முதல் கட்டுமானப் பணிகள் தொடங்கின. இந்த நிலையில் கூடுதலாக ரூ.249 கோடி செலவு செய்து கட்டுமானப் பணிகள் ரூ.1200 கோடியில் நிறைவு பெற்றுள்ளது. இந்த புதிய முனையம் 60,723 சதுர மீட்டர் பரப்பளவில் 2 அடுக்குகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஒரே நேரத்தில் 4000 சர்வதேச பயணிகள், 1500 உள்நாட்டுப் பயணிகளை கையாள முடியும். இந்திய கலாச்சாரம், பாரம்பரியத்தை உணர்த்தும் கலை நயத்துடன் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள புதிய முனையம் திறப்பு விழா இன்று (2–ஆம் தேதி) நடைபெறுகிறது.

இதில் பிரதமர் மோடி அவர்கள் கலந்து கொண்டு புதிய முனையத்தை திறந்து வைப்பதுடன், பல்வேறு புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டங்களை தொடங்கிவைக்கிறார்.

இந்த விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் முக்கியப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்கின்றனர்.

மேலும் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் கடந்த 3 ஆண்டுகளாக 2.81 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு பட்டம் வழங்கப்படவில்லை. அவர்களுக்கான பட்டமளிப்பு விழாவும் அன்றைய தினம் நடைபெறுகிறது. இந்த விழாவிலும் பிரதமர் மோடி அவர்கள் கலந்துகொண்டு மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கிப் பேசுகிறார்.

இதைத் தொடர்ந்து திருச்சி சர்வதேச விமான நிலையத்துக்குச் செல்லும் பிரதமர் மோடி அவர்கள் அங்கு நடைபெறும் விழாவில் ரூ.1200 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய முனையத்தை திறந்து வைத்து பார்வையிடுகிறார். அப்போது புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டங்களை திறந்து வைக்கிறார்.

---

### தென் மாவட்டங்களில் 6 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகை - 5 கிலோ அரிசியைப் பெற்றுக்கொண்டு

## முதல்வரை மகிழ்ச்சியோடு வாழ்த்திச் செல்லும் மக்கள்!

**தூத்துக்குடி, ஜன. 2-**

**முதலமைச்சர் அவர்கள் வெள்ள நிவாரணமாக ரூ.6,000/ நிவாரணத் தொகை மற்றும் 5 கிலோ அரிசி வழங்கியதற்கு பொதுமக்கள் நன்றிகளைத் தெரிவித்து மகிழ்ச்சியோடு பெற்றுச் செல்கின்றனர் என உணவு மற்றும் உணவு வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி குறிப்பிட்டு உள்ளார்.**

தூத்துக்குடி வட்டம் மாப்பிள்ளையூரணி, மாசிலாமணிபுரம் மற்றும் மூன்றாம் மைல் ஆகிய பகுதிகளில் உள்ள கூட்டுறவு மற்றும் அமுதம் நியாய விலைக்கடைகளில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தலைமையில் சமூகநலன்மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பெ. கீதாஜீவன், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்.அர.சக்கரபாணி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ.ஜெகன், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையாஆகியோர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 கிலோ அரிசி மற்றும் ரூ.6,000/ நிவாரணத்தொகை ஆகியவற்றை வழங்கினார்கள்.

பின்னர் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:-

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய தேதிகளில் பெய்த அதிகனமழையின் காரணமாக தூத்துக்குடி வட்டம் மாப்பிள்ளையூரணி, மாசிலாமணிபுரம், மூன்றாம் மைல் ஆகிய பகுதிகளில் மிகக் கடுமையாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இப்பகுதிகளில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களாகிய நாங்கள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தோம்.

மேலும், இப்பகுதிகளில் உள்ள கூட்டுறவு மற்றும் அமுதம் நியாய விலைக்கடைகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட 5 கிலோ அரிசி மற்றும் ரூ.6,000/ நிவாரணத்தொகை ஆகியவற்றை வழங்கினோம்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெள்ள நிவாரணமாக ரூ.6,000/ நிவாரணத்தொகை மற்றும் 5 கிலோ தரமான அரிசி வழங்கியதற்கு பொதுமக்கள் நன்றிகளை தெரிவித்து மகிழ்ச்சியோடு அவற்றை பெற்று சென்றனர்.

மேலும் நிவாரணத்திற்காக வழங்கப்பட்ட அரிசி நல்லமுறையில் வழங்கப்படுகிறதா என்பதையும் நாங்கள் ஆய்வு செய்தோம் என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

---

### தமிழினத் தலைவர்

## கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (8)

### ஜனவரி 3 - அன்று வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, 2023 ஜீன் 3 முதல், ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று “முரசொலி சிறப்பிதழ்” வெளிவரும் என்று ஏற்கனவே அறிவிக்கப் பட்டுள்ளது.**

**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, ஜனவரி 3 புதன் கிழமை முரசொலி சிறப்பிதழ், “கல்வியாளர்கள் பார்வையில் கலைஞர்” என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

**- ஆசிரியர்.**

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 02-01-2024

# குஜராத்தும் மதுவிலக்கும்

மதுவிலக்கு என்றாலே குஜராத்தைதான் மேற்கோள் காட்டுவார்கள். இதோ இப்போது குஜராத் மாநிலத்தில் மதுவிலக்குக்கு விடை கொடுத்துவிட்டது பா.ஜ.க. அரசு. 'காந்தி பிறந்த மண்ணில்' மதுவைப் புகுத்தி விட்டது பா.ஜ.க.

மணிப்பூர் மாநிலத்தில் 32 ஆண்டுகளாக மதுவிலக்கு அமலில் இருந்து வருகிறது. அந்த மதுவிலக்குக் கொள்கையை மாநில பா.ஜ.க. அரசு கடந்த மாதம் விலக்கிக் கொண்டு விட்டது. இதனைத் தொடர்ந்து குஜராத் மாநிலத்திலும் மது புகுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக குஜராத் மாநில மதுவிலக்கு மற்றும் கலால் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், "உலக முதலீட்டாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு உலகளாவிய வணிக சூழலை வழங்குவதற்காக கிஃப்ட் சிட்டி பகுதியில் 'ஒயின் மற்றும் உணவு' வசதிகளை அனுமதிக்க தடை விதிகளை மாற்ற முக்கிய முடிவு எடுக்கப்பட்டுள்ளது" என்று கூறப்பட்டுள்ளது.

1960 மே 1 ஆம் தேதி குஜராத் மாநிலம் உருவானது. அப்போது அங்கு காங்கிரஸ் கட்சி ஆட்சி இருந்தது. அண்ணல் காந்தியடிகள் பிறந்த மண் என்பதால் அங்கு மதுவிலக்கு அமலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் காந்தி நகரில் உள்ள இண்டர்நேஷனல் பைனான்ஸ் டெக் சிட்டியில் மதுவிலக்கை விலக்கிக் கொண்டு விட்டது மாநில பா.ஜ.க. அரசு. குஜராத் மாநில வளர்ச்சியை மனதில் வைத்தும், டெக் சிட்டிக்கு வர இருக்கும் பன்னாட்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் வசதிக்காகவும் இந்த முடிவை எடுத்துள்ளார்கள். இதே போல் எங்களுக்கும் விதிவிலக்கு வேண்டும் என்று மற்ற தொழில் வளர்ச்சி நிறுவனங்களும் கோரிக்கை வைத்துள்ளன. இனி படிப்படியாக அனைவர்க்கும் திறந்து விடப் போவதாகச் சொல்கிறார்கள்.

குஜராத் ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் இசுதான் கத்வி வெளியிட்டுள்ள அறிக்கையில், **"காந்தியின் குஜராத்தில் ஆட்சியில் இருக்கும் பா.ஜ.க. அரசு காந்திஜியை மட்டுமல்ல, ஒட்டுமொத்த குஜராத் மக்களையும் அவமதித்துள்ளது. குஜராத் முதல்வர் பங்களாவில் இருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள கிஃப்ட் சிட்டியில் மது அருந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஊழியர்கள், பார்வையாளர்கள் மற்றும் அதிகாரிகள் இங்கு சென்று குடிக்கலாம், அங்கிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள அகமதாபாத்திற்கு மீண்டும் திரும்பி வரும்போது குடித்ததற்காக வழக்குப்பதிவு செய்யப்படலாம்."** என்றும் அவர் கிண்டலாகச் சொல்லி இருக்கிறார்.

இந்த நிலையில், 'குஜராத் மாநிலத்தில் மது விலக்கு என்பதே ஒரு நாடகம்தான், மது விற்பனை என்பது மறைமுகமாக நடந்தது அது இப்போது வெளிப்படையாக மீறப்படுவதைத்தான் இனி பார்க்கப் போகிறோம்' என்று செய்தி நிறுவனங்கள் எழுதத் தொடங்கி இருக்கின்றன.

பி.பி.சி. வெளியிட்டுள்ள கட்டுரையில், **"குஜராத்தில் 2011-12 முதல் 2017-18 வரை உள்ள காலகட்டத்தில் 3.85 லட்சம் லிட்டர் மதுபானம் விற்பனை செய்யப் பட்டுள்ளதாக குஜராத் மாநில போதைப்பொருள் மற்றும் கலால் துறை தகவல் அறியும் சட்டப்படி ஒருவருக்கு பதிலளித்துள்ளது. உரிமம் பெற்ற கடைகளின் மது விற்பனையில் அகமதாபாத், வதோதரா மற்றும் கட்ச் ஆகியவற்றை தொடர்ந்து சூரத் முன்னணியில் உள்ளது"** என்று கூறப்பட்டுள்ளது.

'டைம்ஸ் ஆஃப் இந்தியா' வெளியிட்டுள்ள செய்திப்படி, ஏப்ரல் 2019 முதல் டிசம்பர் 2020 வரையில் ரூ.215 கோடி மதிப்புள்ள மதுபாட்டில்கள் குஜராத்தில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. குஜராத்தின் வரலாற்றில் எப்போதும் இல்லாத வகையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மதுவின் புழக்கம் மிக அதிகமாக இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள் அங்குள்ள மதுவுக்கு எதிரான செயல்பாட்டாளர்கள். 2017 ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலையொட்டிய சோதனைகளில் மட்டும் அங்கு 10 லட்சம் லிட்டர் மது கைப்பற்றப்பட்டிருக்கிறது. இதன் மதிப்பு ரூ. 23 கோடி!

**"ஆரம்ப காலத்தில் குஜராத்தில் மதுவிலக்குச் சட்டம் கடுமையாக இருந்தது உண்மைதான். ஆனால், 2006ம் ஆண்டு மோடி முதல்வராக இருந்த போது முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் 'Vibrant Gujarat' என்கிற திட்டத்தின் அடிப்படையில் மதுவிலக்குச் சட்டத்தில் சில சலுகைகள் கொண்டு வரப்பட்டன. அதன்படி வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் குஜராத்தில் மது அருந்தத் தடை எதுவும் இல்லை. இதற்கு பின்புதான் குஜராத்தில் சட்டவிரோத மதுப் புழக்கம் அதிகரித்தது. இப்போதும் குஜராத்துக்கு வெளியே இருந்து வருபவர்கள் தங்களது முகவரிச் சான்று அல்லது தங்கும் விடுதியின் மேலாளர் அளிக்கும் கடிதத்தின் அடிப்படையில் மது வாங்கிக் கொள்ளலாம்." என்று குஜராத்தில் சட்டவிரோதமாக புழங்கும் மதுவுக்கு எதிராக கடந்த எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக போராடி வரும் மீனா படேல் பேட்டி அளித்ததாக செய்தி ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

"குஜராத்தில் சட்ட விரோத மதுவிற்பனை மிகப் பெரிய வணிகமாக உருவெடுத்துள்ளது. ராஜஸ்தான் மற்றும் மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களிலிருந்து சட்டவிரோதமாக இங்கு கடத்தி வரப்படும் மது இரட்டை விலை வைத்து விற்பனை செய்யப்படுகிறது. அதுதவிர, குஜராத்திலேயே எரிசாராயத்தையும் எசன்ஸையும் கலந்து மது உற்பத்தி செய்கிறார்கள்" என்றும் இவர் சொல்லி இருக்கிறார். **"அகமதாபாத்தில் சுமார் 11 நட்சத்திர விடுதிகளின் மதுக்கூடங்களில் மதுவின் விலை சுமார் 10 மடங்கு அதிகம்."** என்று பேட்டி அளித்துள்ளார்கள் குஜராத் பத்திரிக்கையாளர்கள்.

**பிற்படுத்தப்பட்ட சமூகங்களின் தலைவரான அல்பேஷ் தாக்கூர், "கடந்த 2016-ம் ஆண்டு அக்டோபர் மாதம் சூரத் அருகிலிருக்கும் வரேலி கிராமத்தில் சட்ட விரோதமாக தயாரிக்கப்பட்ட மதுவை அருந்தியதில் 15 பேர் உயிரிழந்தார்கள். கடந்த 2012ம் ஆண்டு மட்டுமே மிக அதிகளவாக 143 பேர் சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட மதுவை அருந்தி உயிரிழந்திருக்கிறார்கள். இங்கு ஒவ்வோர் ஆண்டும் சராசரியாக 7.50 லட்சம் லிட்டர் எரிசாராயம் கைப்பற்றப்படுகிறது. இவையும் கூட பின்வழியாக கள்ள மது தயாரிப்பாளர்களுக்கு கைமாற்றிப் படுகிறது"** என்று சொல்லி இருக்கிறார்.

மதுவிலக்கு மாநிலத்தின் முகத்தை வெளிப்படையாகவே கிழித்தெறியத் தொடங்கி விட்டது குஜராத் பா.ஜ.க. அரசு.

●●

## பஞ்சாப் மாநில குடியரசு தின அணிவகுப்பு வாகனமும் நிராகரிப்பு!

### வாகனத்தை தேர்வு செய்யாமல் - ஒன்றிய பா.ஜ.க. அரசு நிராகரிப்பு!

சென்னை, ஜன. 2-

மேற்குவங்கத்தை தொடர்ந்து பஞ்சாப் மாநிலத்தின் குடியரசு தின அணிவகுப்பு வாகனத்தையும் டெல்லி குடியரசு தின கொண்டாட்டத்துக்கு தேர்வு செய்யாமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு நிராகரித்துள்ளது.

ஒன்றியத்தில் பா.ஜ.க. அரசு அமைந்தது முதல் அனைத்து விவகாரங்களையும் பா.ஜ.க. அரசியலாக்கி வருகிறது.

டெல்லியில் ஜனவரி 26ம் தேதி நடைபெறும் குடியரசு தின கொண்டாட்ட அணிவகுப்பில் பல்வேறு மாநிலங்களின் கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் வாகனங்கள் கொண்டு வரப்படுவது வழக்கமாகும்.

இதற்காக திரிணாமூல் காங்கிரஸ் கட்சி ஆட்சி நடைபெறும் மேற்குவங்க மாநிலம் உருவாக்கிய வாகனத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு தேர்வு செய்யாமல் புறக்கணித்தது.

இதையடுத்து தற்போது ஆம் ஆத்மி கட்சியின் ஆட்சி நடைபெறும் பஞ்சாப் மாநிலம் உருவாக்கிய வாகனத்தையும் தேர்வு செய்யாமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு நிராகரித்துள்ளது.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை முன்னாள் அமைச்சர் ஆற்காடு வீராசாமி அவர்களின் பேரனும், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி மகனுமான வி.கே. சித்தார்த் தமிழ்நாடு புதுச்சேரி பார் கவுன்சிலில் வழக்கறிஞராக பதிவு செய்ததையொட்டி நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின் போது தமிழ்நாடு முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு ரூபாய். 1 லட்சம் காசோலையினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் கிளாம்பாக்கத்தில் திறந்து வைத்த - கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு செய்தார்!

### முக்கிய நகரங்களுக்கு 184 பேருந்துகளும் - சென்னையில் முக்கிய இடங்களுக்கு 2900 நடைகளும் இயக்கம்!

சென்னை, ஜன.2 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் கிளாம்பாக்கத்தில் திறந்து வைக்கப்பட்ட "கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை" அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு செய்தார்.

இப்பேருந்து முனையத்திலிருந்து நெடுந்தூர தென் மாவட்ட முக்கிய நகரங்களுக்கு (SETC) 164 பேருந்துகளும், சென்னையில் உள்ள முக்கிய இடங்களுக்கு 2900 நடைகள் (MTC Bus Trips) இயக்கப்பட்டுள்ளன.

அதன் விவரம் வருமாறு:

முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை நேற்று முன்தினம் (31.12.2023) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் மற்றும் தலைவரும் (ம) இந்து சமயம் அற நிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு முனையத்திலுள்ள நேரக் காப்பாளர் அறை, கண்காணிப்பு அறை, பேருந்துகளின் நடைமேடைகள் மற்றும் கழிவறை ஆகியவற்றை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, இப்பேருந்து முனையத்திலிருந்து பேருந்துகள் இயக்கப்படுவது குறித்தும், பயணிகளுக்கான வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

நேற்று முன்தினம் (31.12.2023) இதுவரை இப்பேருந்து முனையத்திலிருந்து நெடுந்தூர தென் மாவட்ட முக்கிய நகரங்களுக்கு அரசு விரைவு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் (SETC) 164 பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. அதே போல இப்பேருந்து முனையத்திலிருந்து மாநகர போக்குவரத்துக் கழகம் மூலமாக சென்னையில் உள்ள முக்கிய இடங்களுக்கு 2900 நடைகள் (MTC Bus Trips) இயக்கப்பட்டுள்ளன.

இந்த ஆய்வின் போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் சோ.ருத்ரமூர்த்தி, ந. ரவிக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. மு.இந்துமதி, அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் கே. இளங்கோவன், பொது மேலாளர் வி.குணசேகரன், தலைமைப் பொறியாளர் சீனிவாச ராவ், செயற்பொறியாளர் ராஜன் பாபு மற்றும் காவல்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

## மோகனூர் பேரூராட்சியில் ரூ.22.77 கோடி மதிப்பில் புதிய குடிநீர் திட்டம்!

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தகவல்!

நாமக்கல், ஜன. 2 -

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி, ரூ. 22.77 கோடி மதிப்பில் மோகனூர் பேரூராட்சியில் புதிய குடிநீர் திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும் என நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் கடந்த டிசம்பர் மாதம் 18 ஆம் தேதி முதல் 29 ஆம் தேதி வரை 10 நாட்கள் 13 அரசுத்துறை சார்ந்த அலுவலர்களைக் கொண்டு 39 முகாம்கள் நடத்தப்பட்டு பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளது. மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் பல்வேறு சேவைகள் பெறும் வகையில் பொது மக்களால் வழங்கப்பட்ட கோரிக்கை மனுக்களுக்கு 30 நாட்களுக்குள் தீர்வு காணும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அதன்படி கடந்த 29 ஆம் தேதி மோகனூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு முத்துராஜா தெரு மாசடச்சிஅம்மன் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வு மேற்கொண்ட பின் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி பேசும் போது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மக்களின் குடிநீர் தேவை அடிப்படையாக கருதி உடனடி நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார். அதன்படி மோகனூர் பேரூராட்சிக்கு புதிதாக மல்லம்பாளையம் என்ற இடத்தில் மூன்று எண்ணிக்கையிலான நீர் உறிஞ்சி கிணறுகள் மற்றும் மூன்று மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் மற்றும் பகிர்மான குழாய்கள் புதிதாக அமைத்து காவேரி கரையில் அமைந்துள்ள மோகனூர் பேரூராட்சி



பகுதிகளுக்கு சீராக குடிநீர் விநியோகம் வழங்கும் வகையில் ரூ. 22.77 கோடி மதிப்பில் பணிகள் விரைந்து தொடங்கப்பட்டு நடைபெற உள்ளது என தெரிவித்தார்.

**அங்கன்வாடி மைய கட்டடங்கள்!**

இதை தொடர்ந்து நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியம், அரூர், ஆண்டாபுரம், இராசிபாளையம் மற்றும் சின்ன பெத்தாம்பட்டி ஆகிய ஊராட்சிகளில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் சார்பில், ரூ.52.36 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 4 புதிய அங்கன்வாடி மைய கட்டடங்கள் திறப்பு விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் முன்னிலை வகித்தார்.

நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியம், அரூர் ஊராட்சியில், ரூ.13.57 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையம், ஆண்டாபுரம் ரூ.12.61 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையம், இராசிபாளையம் ஊராட்சியில் ரூ.12.61 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையம், சின்ன பெத்தாம்பட்டி ஊராட்சியில் ரூ.13.57 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையம் என 5 புதிய அங்கன்வாடி மையங்களில் புதிய வகுப்பறைகள், சமையலறை, கழிப்பிடவசதி மற்றும் குடிநீர்வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கொண்ட அங்கன்வாடி மையங்களை மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.சிவக்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் குமார், அட்மா குழுத்தலைவர் நவலடி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் ஏரல் வட்டம் கேம்பலாபாத், சேத்துக்கான் வாய் கான், மாரமங்களம் ஆகிய ஊராட்சிகளில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறைஅமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சந்தித்துகுறைகளைக் கேட்டறிந்து ஆறுதல் தெரிவித்தார்.



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அரையாண்டு விடுமுறை முடிந்து இன்று (02.01.2023) பள்ளிகள் திறக்கப்படும் நிலையில் வேளச்சேரியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் நேற்று விரிவான ஆய்வு மேற்கொண்டு பள்ளியில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்து ஆலோசனைகள் வழங்கினார் .



சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் படைத்தளபதி மாவீரன் பொல்லான் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி அர்ச்சகர் வடுகப்பட்டி பேரூராட்சி ஜெயராமபுரத்தில் பொல்லான் அவர்களின் திருவுருவப் படத்திற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். நிகழ்வில் மாநிலங் களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி, அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடா சலம், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜவகர், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், மாவட்ட ஊராட்சி தலைவர் நவமணி, பொல்லான் வாரிசுதாரர்கள், பல்வேறு அமைப்பினர் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி நகராட்சி, அரசு ஆண்கள் மாதிரி மேல்நிலைப்பள்ளியில், ”மக்களுடன் முதல்வர்” திட்டத்தின்கீழ், மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, தலைமையில் 28.12.2023 அன்று பார்வையிட்டு, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் ஆனந்த், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன், நகர்மன்ற துணைத் தலைவர் தி.முத்து (எ) சுப்ரமணியன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### கனமழையால் பாதிக்கப்பட்ட

# தூத்துக்குடியில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆய்வு!

## பொதுமக்களை நேரில் சந்தித்து குறைகளை கேட்டறிந்தார்!

தூத்துக்குடி, ஜன. 2 -

தூத்துக்குடி மாவட்டம் ஏரல் வட்டம் கேம்பலா பாத், சேத்துக்கான் வாய் கான், மாரமங்களம் ஆகிய ஊராட்சியில் கனமழை யால் பாதிக்கப்பட்ட மக்க ளைஅமைச்சர் செஞ்சி மஸ் தான் நேரில் சந்தித்து குறைகளைக் கேட்டறிந்து ஆறுதல் தெரிவித்தார்.

தென் மாவட்டங்க ளான தூத்துக்குடி, கன்னி யாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, ஆகிய மாவட் டங்களில் கடந்த 17ஆம் தேதி பெய்த கனமழை யால்பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு தமிழக அரசு சார் பில் ஆராயிரம் ரூபாய் நிவாரணத் தொகை வழங் கப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.மேலும் மழை பாதிப்புகளை பார்வையிடு வதற்காக தூத்துக்குடி மாவட்டத்திற்குபகுதிவாரி யாகஅமைச்சர்கள் நிய மித்து அவர் உத்தரவிட் டார். இந்நிலையில் தூத்துக் குடி மாவட்டம் ஏரல் வட் டத்திற்குட்பட்ட கேம்ப லாபாத், சேத்துக்கான் வாய் கான்,பள்ளிவாசல் உள்ளிட்ட பகுதிகளிலும், மாரமங்களம் ஊராட்சிக ளில் அதிக கனமழையால் பாதிக்கப்பட்டமக்களைசி றுபான்மையினர் நலன் மற் றும் வெளி நாடு வாழ் தமி ழர்கள் நலத்துறை அமைச் சர் செஞ்சி மஸ்தான் நேரில் சந்தித்து அவர்களிடம் குறைகளை கேட்டு அறிந்து ஆறுதல் தெரிவித்தார்.

தொடர்ந்து பாதிக்கப் பட்ட மக்களுக்கு முதல மைச்சர் சார்பில்ஆறுதல் தெரிவித்ததுடன் அப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று மழையால் பாதிக்கப் பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டஅ மைச்சர் செஞ்சி மஸ்தான் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் நிலவரம் குறித்து முதல மைச்சரின் கவனத்திற்கு உடனடியாக கொண்டு செல்லப்படும் என அவர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் திருவை குண்டம் கிழக்கு ஒன்றிய செயலாளர் கோட்டா ளம்,விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை செயலா ளர் ரவிக்குமார், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ஆனந்தன், ஒன்றிய அவைத் தலைவர் மாரியப்பன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பா ளர் பிரபாகரன், கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை மாவட்ட துணை அமைப்பாளர் மாரியப் பன், கிளை செயலாளர் ஜான்சன் உள்ளிட்ட உடன் இருந்தனர்.

### புதுக்கோட்டை மாவட்ட எல்லையில்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் அறிவிப்பு!

புதுக்கோட்டை, ஜன. 2 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சரு மான எஸ்.ரகுபதி புதுக் கோட்டை வடக்கு மாவட் டச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் ஆகி யோர் கூட்டாக வெளி யிட்டுள்ள அறிக்கை வரு மாறு:

திருச்சி பாரதிதாசன் பல் கலைக்கழகம் 38 வது பட்ட மளிப்பு விழாவிற்கு வருகை தரும் தமிழக முதல்வர் கழகத் தலைவர் அவர்களுக்கு, புதுக் கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று (02.01.2024 - செவ் வாய்க்கிழமை) காலை 9 மணியளவில் மாவட்ட எல்லையான மாத்தூரில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது.

இந்நிகழ்வுகளில் மாநில , மாவட்ட நிர்வாகிகள் , தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் கள் , முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய , நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள், நிர் வாகிகள், மாவட்டப் பிரதி நிதிகள், நகராட்சி தலை வர்கள் , துணைத் தலைவர்கள் , ஒன்றியப் பெருந்தலைவர்கள் , துணைப் பெருந்தலைவர் கள் , மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள், கழக. முன்னோடிகள், உள் ளாட்சி பிரதிநிதிகள் தவ றாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு தமது அறிக்கையில் புதுக் கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்டச் செய லாளர் கே.கே.செல்லப் பாண்டியன் ஆகியோர் கூறி உள்ளனர்.

### கலைஞர் நூற்றாண்டு விழா:

# 250 பேருக்கு விலையில்லா வீட்டுமனை பட்டா!

## அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்!

புதுக்கோட்டை, ஜன. 2 -

புதுக்கோட்டை மாவட் டம், பொன்னமராவதி வட்டம், மலையாஊரணி யில், முத்தமிழறிஞர் கலை ஞர் அவர்களின் நூற் றாண்டு விழாவினை முன்னிட்டு, வருவாய் மற் றும் பேரிடர் மேலாண் மைத்துறையின் சார்பில், இலுப்பூர் வருவாய் கோட் டத்திற்குட்பட்ட, பொன் னமராவதி, விராலிமலை, குளத்தூர் மற்றும் இலுப் பூர் ஆகிய வட்டங்களைச் சேர்ந்த 250 பயனாளிக ளுக்கு விலையில்லா வீட்டு மனைப் பட்டாவிற்கான ஆணைகளை, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட் டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி 28.12.2023 அன்று வழங்கினார்.

பின்னர் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது;

முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்கள் வாழ்க்கையில் முன்னேற் றம் அடைய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத் தில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் கள். அந்தவகையில், முதல மைச்சர் அவர்கள் முத்தமி ழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பல்வேறு துறைகளின் சார் பில் மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் மாவட்டந் தோறும் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. அதன டிப்படையில் மலையா ஊரணியில், 250 பயனாளி களுக்கு விலையில்லா வீட் டுமனைப் பட்டாவிற்கான ஆணைகள் வழங்கப்பட் டுள்ளது.

முதலமைச்சர் அவர்க ளின் ஆணைக்கிணங்க ஏழை, எளிய பொதுமக்க ளின் நீண்ட நாள் கன வினை நிறைவேற்றும் வகையில் விலையில்லா வீட்டுமனைப் பட்டாக் கள் வழங்கப்பட்டு வருகி றது. இதன்மூலம் விலை யில்லா வீட்டுமனைப் பட்டாக்களை பெற்றுக் கொண்ட பயனாளிகள் அனைவரும் இதனை உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு தங்களது வாழ் வில் முன்னேற்றம் அடைய வேண்டும். தமிழக அரசால் இத்தகைய நலத் திட்டங்களை செயல்படுத் துவதன் மூலம் ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்க்கை தரம் மற்றும் பொருளாதாரம் உயர்வ தற்கு வழிவகை ஏற்படுகி றது என அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவ லர் த மா.செல்வி, இலுப் பூர் வருவாய் கோட்டாட் சியர் தெய்வநாயகி, பொன்னமராவதி ஒன்றி யக்குழுத் தலைவர் சுதா அடைக்கலமணி, பொன்ன மராவதி பேரூராட்சித் தலைவர் சுந்தரி அழகப் பன், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் அ.முத்து, வட்டாட்சியர்கள் சாந்தா (பொன்னமராவதி), கருப் பையா (விராலிமலை), காமராஜ் (குளத்தூர்), சூரி யபிரபு (இலுப்பூர்), பொன் னமராவதி பேரூராட்சி செயல் அலுவலர் கணே சன், உள்ளாட்சி அமைப்பு களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் கழக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாடு திடலில் நடைபெறும் பணிகளை திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சரு மான ஆவடி.நாசர் பார்வையிட்டார் .அப்போது கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், துணை செயலாளர் சின்னதுரை, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், ஒன்றியச் செயலாளர்கள் மூர்த்தி, சிவராமன் ,மருதமுத்து, பொதுக்குழு உறுப்பினர் சோமசுந்தரம், பேரூர் வெங்கடேசன், நகர செயலாளர் வேல்முருகன், பூலாவரி சேகர் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# ஆக்கத்தின் புத்தாண்டே! ஊக்கத்தின் வித்தாண்டே!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

**ஆ**ங்கிலப் புத்தாண்டே!
அனைவரும் வரவேற்கும்
பாங்கான நல்லாண்டே;
பாரெலாம் செல்லாண்டே!

தேங்கிய வாழ்விலே
தெம்பினை ஊட்டுதற்கு,
ஏங்கிய ஏக்கங்கள்
இல்லாமல் ஓட்டுதற்கு,
தாங்கிய துன்பங்கள்
தடமின்றிப் போவதற்கு
ஓங்கிய அழுகுரல்
உவகையாய்ப்
பொலிவதற்கு
வேங்கடம் தாண்டிய
விந்தியத்தின் வடக்கிலே
மூங்கையாய் வேடமிட்டு
மோதவிடும் பேர்வழிகள்
ஈங்கென்றும்
இராமன்போல்
இழிவான கரவிலே
வீங்கிய பகைக்கூட்டம்
விடுகின்ற புகைமூட்டம்
நீங்கியே கலைவதற்கு
நிலையின்றித்
தொலைவதற்கு
நீங்கிடாக் கட்டுகள்
நில்லாமல் அறுவதற்குத்
தூங்கிடா தெழுப்பியே
துணைவரும்
தொடராண்டே!

மூங்கிலில் எழுகின்ற
முருகிசைப் பண்ணாக,
பூங்கமழ் சோலைகள்
பொழிந்திடும் மணமாக,
பூங்குயில் பாட்டாக,
பொழில்மயில் ஆடலாக,
தேங்கனி குலுங்கிட,
செங்கரும்பு கொழித்திட,
பாங்கான வயல்களில்
பசுமையே மிகுந்திட,
தீங்கதிர் ஒளிர்ந்திட,
தேனிலா வளர்ந்திட
யாங்கணும் இன்பமே
யாவிலும் இனிமையே

ஓங்கியே உயர்ந்திட
உலகாண்டே வருகவே!
நீங்காத போர்களால்
நெடும்பகை வளர்ந்திடத்
தாங்காத துயரங்கள்
தனிப்பல அவலங்கள்
தூங்காத இரவுகள்
தொடர்ந்திடும் கரவுகள்
தீங்கான நோய்,திருட்டு
தீராத கொலை,கொள்ளை
ஈங்கின்றிப் போகுமோ?
இன்னல்கள் நீங்குமோ?
ஆங்காலம் ஆகுமோ?

அமைதிஇன்பம் சேருமோ?
ஏங்காமல் ஏங்குகிற
இவ்வைய மக்கள்தாம்
வீங்காமல் வீங்கியே
விடும்கண்ணீர் மாறுமோ?

ஓங்கிவரும் புத்தாண்டே!
உலகோர்க்கு வித்தாண்டே!
பாங்கெலாம் ஓயாசிசு
பாலைவனச் சோலைகள்
ஈங்கெங்கும் படரவே
இன்பங்கள் தொடரவே
நீங்காமல் எங்களுடன்
நேயமாய் வருமாண்டே!

தாங்கியே வையந்தான்
தழைத்திடச் செய்குவாய்;
வாங்கியே நன்மைகள்
வரம்பின்றிப் பெய்குவாய்;
ஏங்கிடாது எவருமே
எழுந்தியங்க உய்குவாய்;
தீங்கிலா உலகிங்குத்
திகழவே வைகுவாய்!

கோங்கிலா மலருண்டோ?
குளிரிலா நிலவுண்டோ?
தாங்கிடா நிலமுண்டோ?
தவழ்ந்திடா முகிலுண்டோ?
ஓங்கிடா வானுண்டா?
உலவிடா வளியுண்டா?
ஆங்கிலப் புத்தாண்டே,
ஆக்கமின்றி நீ உண்டா!

### சி.கோபி தலைமை! ஆரணி மாலா சிறப்புரை!

# ‘கலைஞரின் பேனா ஓர் போர்வாள்’ கருத்தரங்கம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் தொடங்கி வைத்தார்!

வேலூர், ஜன. 2 -

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பத்தில் முர சொலி தமிழ்மன்றம் சார் பில், கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, ‘கலைஞரின் பேனா ஒரு போர்வாள்’ எனும் தலைப் பில் இனமான பேராசியர் அரங்கில் கருத்தரங்கம் நடைபெற்றது.

மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் துணை செயலாளர் சி. கோபி தலைமை தாங்கி னார். ஜி.இளங்கோ, பி.கரு ணாகரன், கே.குப்பன், எஸ்மோகன் கருணா ஆகி யோர் முன்னிலை வகித்த னர்.

சா.பரிமளம், வழக்கறி ஞர் மோகன்ராஜ், எஸ் மணிகண்டன் ஆகியோர் வரவேற்றிட, மு. பிரபு. வீரா குமரன் ஆகியோர் தொகுத்து வழங்க, ஒருங்கி ணைந்த 3 செயலாளர்க ளான, லோ இரவிச்சந்தி ரன் (ஒன்றிய குழுத் தலை வர்) கே.சீதாராமன், இரா. முருகேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மாவட்டக் கழகச் செய லாளர் ஏ.பி நந்தகுமார் எம்.எல்.ஏ.கலைஞர் திருவு ருப்படத்திற்கு மாலை அணிவித்து, நிகழ்ச்சியை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். தலைமை கழக பேச்சாளர் ஆரணி மாலா, கருத்தரங்க உரை நிகழ்த்தி னார்.

இந்நிகழ்வில் வேலூர் மாநகர துணை மேயர் சுனில்குமார், வி.கே.ஆர் சுந்தர வடிவேலு, கே.தயா ளமூர்த்தி, கட்டுக்கல் பாஸ் கர், ஏ.ஏழ்மைநாதன், இரா. தாமோதரன், வெ.ஜெய ராஜ் செஞ்சி சிட்டிபாபு, AS. அன்பழகன், தட்சிணா மூர்த்தி, சி.மார்கபந்து எம். வெங்கடேசன், குட்டி (எ) தியாகராஜன், அசோகன் எம். உதயசூரியன், பாரதி ஆறுமும், எல்.பி.எப். மதிய ழகன், மருத்துவர் கோவி. தூயவன்,பாலா சேட்டு, ஆர்.சத்யா, தாமோ இரவி, கே.சுரேஷ், ஜெயவேலு, ஆர் முரளி, ஜெ.விவேக் எஸ்.சுரேஷ், இரகு, ரத்தின வேல், மாணிக்கவேல் ஜெயக்குமார், கரு.சிரிதர், பாடகர் சிவ, காவனூர் சிவா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியாக ப.விஜய் நன்றி கூறினார். முரசொலி தமிழ்மன்றம் இந்நிகழ்வை ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்தது.

### நமணசமுத்திரம் அருகே சாலை விபத்து:

# காயமடைந்தவர்களுக்கு நிவாரண நிதி!

## வை.முத்துராஜா எம்.எல்.ஏ. வழங்கினார்!

புதுக்கோட்டை, ஜன. 2 -

புதுக்கோட்டை மாவட் டம், திருமயம் தாலுக்கா, நமணசமுத்திரம் அருகே திருச்சி காரைக்குடி தேசிய நெடுஞ்சாலையில் 30.12.2023 அன்று அதி காலை சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங் களிலிருந்து மூன்று வெவ் வெறு நான்கு சக்கர வாக னங்களில் வெவ்வேறு கோவிலுக்கு சென்றுக் கொண்டிருந்தவர்கள், தேநீர் அருந்துவதற்காக சாலையோரத்தில் வாக னங்களை நிறுத்திவிட்டு தேநீர் அருந்திகொண்டி ருந்தபோது, சிமெண்ட் ஏற்றிகொண்டு வந்த லாரி எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் திருவள் ளூர் மாவட்டம், ஊத்துக் கோட்டை தாலுக்கா, பனஞ்சேரியைச் சேர்ந்த ஜெகநாதன் (வயது 60) த/ பெ.பாலன் மற்றும் சாந்தி (வயது 55), க/பெ.சீனிவா சன், திருவள்ளூார் மாவட் டம், திருமுல்லைவாயில், எல்லையம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த கோகு லகிருஷ்ணன் (வயது 26) த/பெ.ராமநாதன் மற்றும் சென்னை மாவட்டம், அமைந்தகரையைச் சேர்ந்த சதீஷ் (வயது 25) த/பெ.சக்திவேல் ஆகிய நால்வரும் சம்பவ இடத்தி லேயே உயிரிழந்தார்கள். மேலும் திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல், பாக்கியலட்சுமி நகர், அன்னை இந்திரா காந்தி தெருவைச் சேர்ந்த திரு. சுரேஷ் (வயது 39), த/ பெ.ஜெயராமன் என்பவர் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்து வமனையில் உயிரிழந்தார்.

மேலும் இவ்விபத்தில் 5 நபர்களுக்கு பலத்த காய மும், 14 நபர்களுக்கு இலே சான காயமும் ஏற்பட்டு, புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்து வமனையில் சிகிச்சை பெற் றுவருகின்றனர். அதனடிப் படையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உயிரிழந்தவர்களின் குடும் பத்தினருக்கு தலா ரூ.2 இலட்சமும், பலத்த காயம டைந்த நபர்களுக்கு தலா ரூ.1 இலட்சமும் மற்றும் இலேசான காயமடைந்த நபர்களுக்கு தலா ரூ.50,000 மும் வழங்கிட உத்தரவிட் டுள்ளா ர்கள்.

அதனடிப்படையில், புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்து வமனையில் சிகிச்சை பெற் றுவரும் பலத்த காயம டைந்த 5 நபர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.1 இலட்சத்திற் கான காசோலைகளையும் மற்றும் இலேசான காயம டைந்த 14 நபர்களுக்கு தலா ரூ.50,000 க்கான காசோலைகளையும், மாவட்ட வருவாய் அலுவ லர் மா.செல்வி , புது க் கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா ஆகி யோர் 30.12.2023 அன்று நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, அவர்களுக்கு அளிக் கப்பட்டு வரும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்து வர்களிடம் கேட்டறிந்து, காசோலைகளை வழங்கி னார்கள்.

இந்நிகழ்வில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகே சன், மருத்துவக்கல்லூரி மருத்துவமனை இருக்கை மருத்துவர் மருத்துவர் இந் திரா வட்டாட்சியர்கள் கவியரசன் (புதுக் கோட்டை), புவியரசன் (திருமயம்), முள்ளிப் பட்டி ஊராட்சிமன்றத் தலைவர் ஆதீஸ்வரன், உள் ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனி ருந்தனர்.



திருச்சி மாவட்டம்,மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருப்பைஞ்ஞீ ஊராட்சி, அண்ணா நகர் பகுதி மக்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் 149 இலவச வீட்டு மனைப் பட்டாவை மண்ணச்சநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.கதிரவன் பயனாளிகளிடம் வழங்கினார்.உடன் ஒன்றியச் செயலாளர்கள்,நகர செயலாளர்கள் பேரூராட்சி மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள் கவுன்சிலர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





# எங்கள் முதல்வரே

வருக... வருக...

அன்புடன் வரவேற்கும்

## கே.என்.நேரு

நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் / கழக முதன்மைச் செயலாளர்

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர்

காடுவெட்டி **ந.தியாகராஜன்**
திருச்சி வடக்கு மாவட்டச் செயலாளர்

**க.வைரமணி**
திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர்


கலைஞர் 100
1924 - 2023
முத்தமிழறிஞர் பதிப்பகம்
முத்தமிழறிஞர் பதிப்பகத்தைத் தொடங்கி வைத்து,
9 நூல்கள் வெளியிடுதல்
நாள் : 02-01-2024 செவ்வாய்க்கிழமை
ARASU ARTS
வெளியிடுபவர்
கழகத் தலைவர்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்கள்
உடன்பிறப்பே
Justice
திராவிடத்தால் வாழ்கிறோம் 1
திராவிடத்தால் வாழ்கிறோம் 2
'டாக்டர்' கலைஞர்
திராவிட சினிமா
திராவிட மாடல் அரசு
திராவிடப் போராளிகள்
இடம் பொருள் கலைஞர்
கலைஞரும் நானும்
முத்தமிழறிஞர் பதிப்பகம்
அன்பகம், தேனாம்பேட்டை, சென்னை - 600 018.



# 2023 - 'திராவிட மாடல்' அரசின் முத்திரைச் சாதனைகள் சில...



**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான "திராவிட மாடல் அரசின்" ஜனவரி 2023 முதல் டிசம்பர் 2023 வரையில் ஓராண்டில் சிறப்பான திட்டங்கள் தீட்டப்பட்டு அவை செயல்படுத்தப்பட்டுள்ளன. அத்திட்டங்களில் சிலவற்றை மட்டும் இங்கே தொகுத்துள்ளோம்.**

**ஓராண்டின் சாதனைத் திட்டங்களில் சில இதோ....**

## ஜனவரி

* சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் சென்னை இலக்கியத் திருவிழாவை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் 100 நூல்களை வெளியிட்டார்.

* தமிழ்நாடு சட்டப் பேரவையில் உரையாற்றிய கவர்னர் ஆர்.என்.ரவி அம்பேத்கர், காமராசர், அண்ணா, கலைஞர் ஆகிய தலைவர்களின் பெயர்களை வாசிக்காமல் புறக்கணித்தார். இதனால், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆளுநருக்கு எதிராக ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இதையடுத்து கவர்னர் ஆர்.என்.ரவி, சட்டப் பேரவைக் கூட்டம் முடியும் முன்பே, பாதியிலேயே அவையில் இருந்து வெளியேறினார்.

* சேது சமுத்திரத் திட்டத்தை ஒன்றிய அரசு உடனடியாக நிறைவேற்றிட வலியுறுத்தி சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தனித் தீர்மானம் கொண்டு வந்தார். இந்த தீர்மானம் அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.



சென்னை, வில்லிவாக்கம், அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயில் மைதானத்தில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில், 1,250 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்கள் மற்றும் 1,250 கிராமப்புறத் திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள 2 இலட்சம் ரூபாய் வீதம் 2500 திருக்கோயில்களுக்கு 50 கோடி ரூபாய்க்கான வங்கி வரைவோலைகளை வழங்கிடும் அடையாளமாக 18 திருக்கோயில்களைச் சார்ந்த நிர்வாகிகளிடம் வரைவோலைகளை முதல்வர் வழங்கி திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

* **தமிழ்நாடு அரசுப் பணிகளில் சேர தமிழில் தேர்ச்சி கட்டாயம். மசோதா தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றம்.**

* தமிழ்நாடு மற்றும் வெளிநாடு பதிப்பகத்தினரிடையே 365 நூல்களை மொழி பெயர்ப்பு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது.

* குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் தமிழ்நாடு பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் புத்தொழில் நிதித் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். முதல் கட்டமாக 5 நிறுவனங்களுக்கு ரூ.750 கோடி முதலீடு செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது.

* ஒடிசாவில் தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை ஒடிசா மாநில விளையாட்டுத் துறை அமைச்சக அதிகாரிகளுடன் உலகத்தரம் வாய்ந்த வகையில் விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிப்பது உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு மேம்பாட்டு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

* 17 ஆண்டுகளுக்குப் பிறகு பழநி மலைக் கோயில் குடமுழுக்கு நடைபெற்றது.

## பிப்ரவரி

* அரசு விரைவுப் பேருந்துகளின் இருப்பிடத்தை அறிய 'சென்னை பஸ் செயலி' அறிமுகம்.



* **திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராம் இந்து கல்லூரியில் நடைபெற்ற விழாவில், அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை படித்து உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 உதவித் தொகை வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

* நந்தம்பாக்கம் சென்னை வர்த்தக மையத்தில் நடந்த 'கிரெடாய்' கண்காட்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு ரியல் எஸ்டேட் தொலை நோக்கு திட்டம் 2023ஐ வெளியிட்டார்.


* நாடு முழுவதும் உள்ள 5 ஆயிரம் அரசு பள்ளி மாணவர்கள் உருவாக்கிய, 150 செயற்கைகோள்களை சுமந்து சென்ற 'ஹைபிரிட் சவுண்டிங்' ராக்கெட் மாமல்லபுரம் அருகே திருவிடந்தை கடற்கரை பகுதியில் இருந்து வெற்றிகரமாக ஏவப்பட்டது.

* **தமிழ்நாட்டில் 433 அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் விரிவாக்கம், 44 இடங்களில் புதிய மருத்துவமனைக்கு அடிக்கல், திருநங்கைகளுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது.**

* மின்சார வாகன உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் மாநில திருத்தப்பட்ட மின் வாகனக் கொள்கையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார். இதன்மூலம் ரூ.50,000 கோடி முதலீட்டை ஈர்த்து 1.5 லட்சம் வேலைவாய்ப்பை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

* ஏற்றமிகு சிறப்புத் திட்டங்கள் எனும் பெயரில் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவு வழங்குவது, காலை உணவுத் திட்டம் விரிவாக்கம், திருநங்கைகளுக்கு ஓய்வூதியம் அதிகரிப்பு உள்ளிட்ட ஏழு திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

## மார்ச்



* சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கலைஞர் மு.கருணாநிதி மாடத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

* **கீழடியில் 2 ஏக்கர் பரப்பளவில் ரூ.18.43 கோடி செலவில் பிரமாண்டமாக கட்டப்பட்ட தொல்பொருள் அருங்காட்சியத்தை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

* தமிழ்நாடு நகர எரிவாயு விநியோக கொள்கை 2023 உள்ளிட்ட, பல்வேறு அரசு திட்டங்கள் மற்றும் கொள்கைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.

* தமிழ்நாடு அரசின் 2023-2024ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை, நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் சட்டப் பேரவையில் தாக்கல் செய்தார். அதில் பெண்களுக்கு மாதம் ரூ.1000 உதவித் தொகை, கோவை, மதுரையில் மெட்ரோ ரயில் திட்டம் உள்ளிட்ட பல்வேறு முக்கிய அம்சங்கள் இடம் பெற்றன.

* தமிழ்நாடு அரசின் 2023-2024ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கையை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார். பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு கூட்டுறவுத் துறை மூலம் ரூ.14,000 கோடி பயிர்க் கடன் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

* தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியால், திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதா மீண்டும் சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் கொண்டு வரப்பட்டு, அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் ஆதரவுடன் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

* மயிலாடுதுறையில் அமைக்கப்பட்ட மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

* **தமிழ்நாடு மகளிர் காவல்துறையின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு 'அவள்' திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இதில் பெண் காவலர்களின் சூழ்நிலைக்கேற்ப விடுப்பு வழங்குவது உள்ளிட்ட 9 திட்டங்களை அறிவித்தார்.**

* **தமிழ்நாட்டில் ஒரு கோடி மகளிருக்கு ரூ.1,000 மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும் என சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.**

## ஏப்ரல்

* கேரள மாநிலம், கோட்டயம், வைக்கத்தில் நடந்த வைக்கம் சத்தியாகிரக போராட்டத்தின் நூற்றாண்டு விழாவில், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வைக்கம் சத்தியாகிரக போராட்ட நூற்றாண்டு விழாவிற்கான இலச்சினையை வெளியிட்டார்.

* தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில் கீழடி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளான கொந்தகை, அகரம், திருவண்ணாமலை மாவட்டம் கீழ்நமண்டி ஆகிய இடங்களில் அகழாய்வு பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

* கடற்கரை ரோந்து மற்றும் மீட்பு இழுவை வாகனங்களின் சேவையை தொடங்கி வைத்து, ரூ.20 கோடியில் 12 புதிய தீயணைப்பு நிலையங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

* தமிழ்நாடு சட்டப் பேரவையில் இரண்டாவது முறையாக நிறைவேற்றப்பட்ட ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதா அரசிதழில் வெளியிடப்பட்டு உடனடியாக அமலுக்கு வந்தது. அதன்படி, தடையை மீறினால் 5 ஆண்டு சிறை தண்டனை, ரூ.20 லட்சம் அபராதம் வரை விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

* முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கோரிக்கையை ஏற்று சி.ஆர்.பி.எப். உள்பட அனைத்து ஆயுதப் படை காவலர் தேர்வையும் ஆங்கிலம், இந்தி மட்டுமல்லாமல் தமிழ் உள்பட 13 மாநில மொழிகளிலும் நடத்துவதற்கு ஒன்றிய உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்தது.

## மே

* நெல்லையில் "பொருநை" அருங்காட்சியகத்திற்கான கட்டுமானப் பணிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

* தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராம ஊராட்சிகள் கணினி மயமாக்கப்பட்டதை தொடர்ந்து, வீட்டு வரி, சொத்துவரிகளை ஆன்லைனில் செலுத்தும் வசதி அமலானது.





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திருவாரூர் மாவட்டம், காட்டூரில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் கோட்டத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ், பீகார் மாநில நீர்வளத்துறை மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் சஞ்சய் குமார் ஜா, தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர் எ.வ.வேலு, திருமதி.செல்வி செல்வம், திருமதி.சாந்தா ஸ்டாலின் மற்றும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தயாளு அம்மாள் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் மருத்துவர் மோகன் காமேஸ்வரன், அறங்காவலர் சம்பத்குமார், பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர். (20.6.2023)

* அரசுப் பேருந்துகளில் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு பயணச் சீட்டு கட்டணம் கிடையாது என தமிழ்நாடு அரசு அறிவித்தது.

* தமிழ்நாட்டில் நவீன வகை கார்களை தயாரித்தல், மின்சார வாகனத்துக்கான மின்கலன் தொகுப்பு உருவாக்கம் ஆகியவற்றுக்காக ஹூண்டாய் நிறுவனம் ரூ.20,000 கோடி முதலீடு செய்கிறது. சென்னையில் முதல்வர் ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ்நாடு அரசுக்கும், அந்த நிறுவனத்துக்கும் இடையே கையொப்பமானது.



## ஜூன்

* கலைஞரின் நூற்றாண்டு விழாவையொட்டி, கலைஞர் நூற்றாண்டு இலச்சினையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.

* தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து, சென்னை அடுத்த ஒரகடத்தில் நிறுவியுள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களை திறந்து வைத்தார்.





* **சென்னை, கிண்டி கிங் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், 1,000 படுக்கைகளுடன் 240.54 கோடி செலவில் உலகத் தரத்தில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையை முதல்வர் மு.க.ஸ்டாலின், அவர்கள் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுடன் இணைந்து திறந்து வைத்தார்.**

* சென்னை நந்தம்பாக்கத்தில் ரூ.116 கோடியில் நிதி நுட்ப நகரம் அமைப்பதற்கும், முதற்கட்டமாக ரூ.254 கோடியில் சர்வதேச தரத்திலான நிதிநுட்ப கோபுரம் கட்டுவதற்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

* **திருவாரூர் மாவட்டம், காட்டூரில் புதிதாக கட்டப்பட்ட கலைஞர் கோட்டம் மற்றும் கலைஞரின் திருவுருவச் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் அவரது சகோதரி செல்வி செல்வம் ஆகியோர் திறந்து வைத்தனர்.**

* சென்னையில் நடந்த பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் நாள் விழாவில், கடலூர் மாவட்டம், பண்ருட்டி, காடாம்புலியூரில் அமைக்கப்பட்டுள்ள முந்திரி பதப்படுத்தும் குறுந்தொழில் குழுமத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

* மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு ரூ.70,000 கடனுதவியை 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தின் மூலம் வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

* தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் ரூ.125 கோடி மதிப்பில் கட்டப்பட்ட 500 நகர்ப்புற சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்களை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். ஒவ்வொரு மையத்திலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார ஆய்வாளர் மற்றும் ஒரு மருத்துவமனைப் பணியாளர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## ஜூலை

* மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர், வீராங்கனைகள் திறன் மேம்பாட்டுக்காக 6 மாவட்டங்களில் முதற்கட்டமாக பயிற்சி அரங்கங்கள் அமைக்கப்படும் என்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

* **மதுரையில் ரூ.215 கோடி மதிப்பில் சர்வதேச தரத்தில் பிரமாண்டமான முறையில் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

* சட்டம் பயிலும் மாணவர்களுக்கு வழிகாட்டும் வகையில் 'சத்திய தேவ் லா அகாடமி'யை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

* ராணிப்பேட்டை சிப்காட் நிலை 3இல் திரவ மருத்துவ மற்றும் தொழில் ஆக்சிஜன், திரவ நைட்ரஜன், திரவ ஆர்கான் உற்பத்தியை மேற்கொள்ளுவதற்காக அதிநவீன ஒருங்கிணைப்பு ஆலை அமைக்கும் பணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

* **தமிழ்நாட்டில் முதியோர் உதவித் தொகை ரூ.1,200 உயர்த்தி வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.**

* எழும்பூர் மேயர் ராதாகிருஷ்ணன் அரங்கத்தில் ஹாக்கி விளையாட்டரங்கம், ஒலிம்பிக் தரத்திலான புதிய செயற்கை இழை மைதானம் மற்றும் கலைஞர் நூற்றாண்டு பார்வையாளர் மாடம் ஆகியவற்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

* **மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கும் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் விண்ணப்பப் பதிவு செய்யும் பணியை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தருமபுரி மாவட்டம் தொப்பூரில் தொடங்கி வைத்தார்.**

## ஆகஸ்ட்

* **கிழக்குக் கடற்கரை சாலை பேரூரில், ரூ.4,276 கோடியே 44 லட்சம் மதிப்பீட்டில் கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் அமைக்கும் பணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

* **நாட்டிலேயே முதல் முறையாக தமிழ்நாடு முழுவதும் 31,000 அரசுப் பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**



* பிரபல பின்னணி பாடகர் மறைந்த டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் முழு உருவச் சிலையை மதுரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

* அமெரிக்காவை தலைமையிடமாக கொண்ட சரக்கு போக்குவரத்து மற்றும் விநியோக சங்கிலி மேலாண்மையில் யு.பி.எஸ். நிறுவனம் - சென்னைப் போரூரில் தொழில்நுட்ப மையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

* சென்னையில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு நினைவு பன்னாட்டு மாரத்தான் - 2023 போட்டியில் 50,629 ஆண்கள், 21,514 பெண்கள், 1,063 மூன்றாம் பாலினத்தவர் பங்கேற்றனர். மொத்தம் 73,206 பேர் கலந்துகொண்ட இப்போட்டி கின்னஸ் சாதனை படைத்ததாக அறிவிக்கப்பட்டது.

* **நடப்பாண்டில் விவசாயிகளுக்கு 50 ஆயிரம் இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

* **தமிழ்நாட்டில் 31,000 பள்ளிகளில் பயிலும் 17 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் விரிவுப்படுத்தப்பட்ட காலை உணவுத் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருக்குவளையில் தொடங்கி வைத்தார்.**

## செப்டம்பர்

* தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளுக்கு ஆண்டுக்கு 4 முறை மின் கட்டணச்சலுகை வழங்கப்படும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு.

* கோயில்களில் அர்ச்சகர்களை நியமிக்கும் விவகாரத்தில் தமிழ்நாட்டில் தற்போது இருக்கும் நிலையே தொடரும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவு.

* தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ச்சி பெற்ற தேர்வர்களுக்கு அரசுப் பணி நியமன ஆணையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

* **குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' திட்ட தொடக்க விழா காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி மைதானத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. விழாவில்,**





**திட்டத்தைத் தொடங்கி வைக்கும் வகையில் 13 பெண்களுக்கு வங்கி பற்று அட்டைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். இத்திட்டத்தின் மூலம் மாதந்தோறும் ரூ.1,000 வீதம் ஒரு கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வழங்கப்பட்டு வருகிறது.**

* இறக்கும் முன் உறுப்பு தானம் செய்வோரின் இறுதிச் சடங்குகள் இனி அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

## அக்டோபர்

* சென்னையில் சாதனை படைத்த தமிழ்நாட்டு விண்வெளி விஞ்ஞானிகள் சிவன், மயில்சாமி அண்ணாதுரை, நாராயணன், ராஜரர், சங்கரன், ஆசீர் பாக்கியராஜ், வனிதா, நிகார் ஷாஜி, வீரமுத்துவேல் ஆகியோருக்கு தலா ரூ.25 லட்சமும், பாராட்டு சான்றிதழும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

* சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாமின் திருவுருவச் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

* அடுக்குமாடி குடியிருப்புகளில் பொது வசதிகளுக்கான மின் இணைப்பு கட்டணம் யூனிட்டுக்கு ரூ.8ல் இருந்து ரூ.5.50 குறைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

## நவம்பர்

* சாலைகளில் ஏற்படும் இடர்ப்பாடுகள் குறித்து பொதுமக்கள் புகார் தெரிவிப்பதற்காக 'நம்ம சாலை' என்ற புதிய செயலியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

* தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் சர்வதேச கருத்தரங்கத்தை (டாஸ்கான் 2023) அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் தொடங்கி வைத்தார்.

* **கோயில்களில் அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகர்களாக நியமிக்கும் விவகாரத்தில் தமிழ்நாடு அரசு பிறப்பித்துள்ள அரசாணை குறித்து எந்தவித கருத்து கூறவோ அல்லது தற்போது அதற்கு தடை விதிக்கவோ முடியாது என உச்ச நீதிமன்றம் தெரிவித்தது.**

* தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஆளுநர் திருப்பி அனுப்பிய பல்கலைக்கழகங்கள் தொடர்பான 10 மசோதாக்கள் மீண்டும் நிறைவேற்றப்பட்டன.

* **'உங்களைத் தேடி, உங்கள் ஊரில்' திட்டத்தின்படி அனைத்து மாவட்ட கலெக்டர்களும், மாதத்தில் ஒரு நாள் முழுவதும் கிராமங்களில் தங்கி மக்களின் குறைகளுக்கு உடனடி தீர்வு காண வேண்டும் என்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவு.**

* சென்னையில் ஓ.எம்.ஆர். சாலையில் இந்திரா நகர் சந்திப்பில் ரூ.18.15 கோடியில் 'U' வடிவ மேம்பாலத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

* **சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

## டிசம்பர்

* மிக்ஜாம் புயல் பாதிப்பு மற்றும் தென் மாவட்ட வெள்ள சேதங்களுக்கு நிவாரண நிதியை வழங்க கோரி டெல்லியில் பிரதமர் மோடியை சந்தித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோரிக்கை மனு அளித்தார்.

* மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட மக்களுக்கு ரூபாய் 6000 நிவாரண நிதி வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.



சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்கள் திருவுருவச் சிலை திறப்பு (27.11.2023)

* கோவையில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

* நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி, கடும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நிதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால், ரூபாய் 6000, ரூபாய் ஆயிரம் என்று அறிவிக்கப்பட்டு அம்மக்களுக்கு நிவாரண நிதி வழங்கப்பட்டது.

* வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா - சிறப்பு மலர் வெளியீடு, முதல்வர் மு.க.ஸ்டாலின், கேரள முதல்வர் பினராயி விஜயன், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி ஆகியோர் பங்கேற்பு.

* மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.1000 கோடியில் நிவாரணத் தொகுப்பு திட்டம் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

* **கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் இந்தியாவிலேயே மிகப் பெரிய அளவில் 'கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்' முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மதுரை புதுநத்தம் சாலையில், 2, 13, 338 சதுர அடி பரப்பளவில், தரைத்தளம் மற்றும் 6 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், எச்.சி.எல். குழுமத்தின் நிறுவனர் ஷிவ் நாடார், தலைவர் திருமதி ரோஷினி நாடார், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அமைச்சர் பெருமக்கள், மாண்பமை நீதியரசர்கள், மதுரை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எம்.எஸ். சங்கீதா, , மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். (15.7.2023)



கிளாம்பாக்கத்தில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். (30.12.2023)





02.01.2024

திருச்சிராப்பள்ளி
மாவட்டத்திற்கு
பல்வேறு நிகழ்ச்சிகளில்
கலந்து கொள்ள
வருகை தரும்
மாண்புமிகு.

தமிழ்நாடு
முதல்வர்
அவர்களே
வருக! வருக!

மாண்புமிகு.
கே.என்.நேரு
கழக முதன்மை செயலாளர்
நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்

காடுவெட்டி
ந.தியாகராஜன் MA., MLA.,
திருச்சி வடக்கு மாவட்ட செயலாளர்,
முசிறி சட்டமன்ற தொகுதி

மண்ணச்சநல்லூர் சீ.கதிரவன் BE., MLA.,
மண்ணச்சநல்லூர் சட்டமன்ற தொகுதி
திருச்சி வடக்கு மாவட்ட தி.மு.க


கலைஞர்
100
1924 - 2023
SRI ARTS
ATTUR - 98945 01234
பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு
2.1.2024 திருச்சி மாவட்டம் வருகை தரும்
கழகத்தலைவர்–மாண்புமிகு
முதலமைச்சர்
அவர்களே வருக... வருக...வருக...
கழக முதன்மைச் செயலாளர்,
மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
திரு. கே.என்.நேரு அவர்கள்
அன்பில் மகேஸ் பொய்யாமொழி MCA.,
மாவட்டக் கழகச் செயலாளர்–பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க

## முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுடலை அடக்கம் செய்ய கடற்கரையில் இடம் கொடுக்கக் கூடாதென்று

# உச்சநீதி மன்றத்தில் தடை வாங்க முயற்சித்தவர் எடப்பாடி!

## ‘கலைஞர் செய்திகள்’ சிறப்புப் பேட்டியில் - கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பகிரங்கக் குற்றச்சாட்டு!

**சென்னை, ஜன. 2 - ‘கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சியின் ‘வினா?’ நிகழ்ச்சிக்கு சிறப்புப் பேட்டியளித்த கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள், “முத்தமிழறிஞர் கலைஞரை அடக்கம் செய்ய கடற்கரையில் இடம் கொடுக்கக் கூடாதென்று உச்சநீதிமன்றத்தில் தடை வாங்க முயற்சித்தவர் எடப்பாடி!” என்று பகிரங்கக் குற்றஞ்சாட்டினார்.**

கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியில் நேற்று முன்தினம் மாலை ஒளிபரப்பான, “வினா” எனும் சிறப்பு நேர்காணல்நிகழ்ச்சியில் தொலைக்காட்சியின் நெறியாளர் சரவணன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்களிடம் சிறப்புப் பேட்டி கண்டார்.

அப்பேட்டி வருமாறு :

**கேள்வி:** அ.தி.மு.க.வின் பொதுக்குழு கூடியது. வழக்கமாக எதிர்க்கட்சி பொதுக்குழு கூட்டினார்கள் என்றால், ஆளுங்கட்சியை திட்டத்தானே செய்வார்கள். அதற்கு ஏன் ஒரு மிகப்பெரிய கண்டன அறிக்கையை வெளியிட்டு இருக்கிறீர்கள்?

**பதில்:** கண்டன அறிக்கை என்றால், ஒரு எதிர்க்கட்சி கண்டிக்கட்டும் அது பற்றி கவலை இல்லை. அதற்காகத்தான் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் ஆக்கபூர்வமாக பேச வேண்டும் அறிவுப்பூர்வமாக பேச வேண்டும் மனசாட்சியோடு பேச வேண்டும். அது மொத்தத்தையும் அடகு வைத்துவிட்டு எந்த ஒரு எதிர்க்கட்சியாக இருந்தாலும் ஆளுங்கட்சியின் மீது குற்றம் சாட்ட வேண்டும். அந்த குற்றச்சாட்டுகளுக்கு ஆளுங்கட்சி ஆதாரத்தோடு பதில் சொல்ல வேண்டும். இரண்டையும் பார்த்து பொதுமக்கள் முடிவு செய்வார்கள். ஆனால், இவர் ஒரு தெருச் சண்டை குழாய் சண்டை போடுவது போல, ஒரு முன்னாள் முதலமைச்சராக இருந்தவர், அவருடைய குரலும் அவருடைய உடல் மொழியையும் பாருங்கள். எதிரில் யாரிடமோ சண்டை போடுவது போல பேசுகிறாரே ஒழிய, அவருடைய கட்சிக்காரர்கள்தான் எதிரில் உட்கார்ந்திருக்கிறார் என்ற உணர்வு கூட இல்லாமல் பேசுவதாகத்தான் நான் பார்த்ததிலிருந்து தெரிந்தது. உங்களுக்கு பார்வைக்கு எப்படி என்று தெரியவில்லை.

அதாவது, எங்களைப் பற்றித் தவறாகச் சொல்லும்போது நாங்கள் அமைதியாக இருந்துவிட்டால் மக்கள் மத்தியில் அவ்வாறு இருக்குமோ என்று எண்ணத் தோன்றும் அல்லவா...

### ஓடுகிற மாட்டைப் பிடித்து அடைத்து வைக்க வேண்டும்!

**கேள்வி:** 2 தீர்மானங்கள் நிறைவேற்றி இருக்கிறார்கள். அதில் எது அநியாயத்திற்கு பொய்யாக இருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

**பதில்:** அனைத்துமே உணர்வுப்பூர்வமாக இல்லை. ஒன்றுமே இல்லை. சும்மா தீர்மானத்திற்காக கூடினோம், களைந்தோம் என்றுதான் இருந்ததே தவிர, 23 தீர்மானங்கள் மீது ஏதாவது விவாதித்தார்களா? பேசினார்களா? கருத்துக்கள் கேட்டார்களா? ஒன்றும் இல்லை. ஏதோ அவர்களுக்கு இருக்கும் நெருக்கடி. இப்போது அவர்களுக்கு இருக்கும் நெருக்கடி என்னவென்றால், ஒரு பக்கம் சசிகலா புறப்பட்டுவிட்டார். இன்னொரு பக்கம் டி.டி.வி. புறப்பட்டுவிட்டார். இன்னொரு பக்கம் ஓ.பி.எஸ். புறப்பட்டு விட்டார். ஓடுகிற மாட்டை பிடித்து அடைத்து வைக்க வேண்டும் என்பதுபோல ஒரு எண்ணத்தோடுதான் அந்த பொதுக்குழுவை கூட்டி இருக்கிறார்களே தவிர, இவ்வளவு பெரிய வெள்ளம் சூழ்ந்த நேரத்தில் ஒரு பொதுக்குழு தேவைதானா? ஆங்காங்கே பொதுமக்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு கொண்டிருக்கிறார்கள்.

அந்த நேரத்தில் பாதிக்கப்பட்ட தென் மாவட்டத்தில் இருந்து வந்தவர்கள் பொதுக்குழுவில் இருந்திருப்பார்கள். அவர்களெல்லாம் எவ்வளவு இழந்திருப்பார்கள். அதையெல்லாம் பொருட்படுத்தாமல் கூடுகிறார்கள் என்றால், அவர்கள் ஆட்களை தக்கவைத்துக் கொள்ள வேண்டும். காரணம், இதில் யாராவது சென்று விடப்போகிறார்கள். ஆள் பிடித்து விட்டு சென்று விடக்கூடாது. ஏன் என்றால், ஆளைப் பிடித்துத்தானே இவர்கள் வந்தார்கள். இவர் முதலமைச்சர் ஆனதே கூவத்தூரில் எல்லாரையும் ஆடு, மாடு அடைத்து போட்டு வைத்தது போல ஒரு மாத காலம் வைத்தார்கள். இதையெல்லாம் மக்கள் மறந்து விட்டார்கள் என்று நினைக்கிறார்கள்.

ஏன்; இந்தக் கட்சியில் இருக்கும் எம்.எல்.ஏ.க்களுக்குத் தெரியுமே. ஒவ்வொருவருக்கும் எவ்வளவு காசு கொடுத்தார்கள். எவ்வளவு தங்கம் கொடுத்தார்கள். அதாவது அந்த நேரத்தில் 2016இல் இருந்து அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களாக அதிமுகவில் இருந்தவர்கள் பல பேர் என்னிடம் சொல்லி இருக்கிறார்கள். நானே கேட்டிருக்கிறேன். கோல்டன் பீரியட் என்றுசொல்வார்கள். ஏனென்றால்கிலோ கணக்கில் அப்போதுதான் அவர்களுக்குத் தங்கம் கிடைத்ததாம். எப்படி கோல்டன் பீரியட் என்று சொல்கிறீர்கள்!? இறந்து விட்டார் உங்கள் தலைவி இவ்வாறு சொல்கிறீர்களே என்று கேட்டால், அந்த நேரத்தில்தான் எங்களுக்கு கிலோ கணக்கில் தங்கம் கொடுத்தார்கள். காசு கொடுத்தார்கள். எம்.எல்.ஏ.க்கள் அந்த அளவிற்கு அவரோடு இருந்தார்கள். அவ்வாறு பிடித்து வைத்திருந்தார். அவர்கள் இப்போது பறந்து போய் விடுவார்களோ என்ற எண்ணத்தில்தான்.

**கேள்வி:** அவர் சொல்வதும் நீங்கள் சொல்வதும் வேறு வேறு திசையில் இருக்கிறதே... அவர் பொதுக்குழுவை ஆரம்பிக்கும்போதே, வழக்கமாக பொதுக்குழு என்றால் படபடப்போடு இருப்போம். ஆனால் இந்த முறைதான் மிகவும் தெள்ளத்தெளிவாக, அமைதியாக இருக்கிறது. ஏனென்றால் நமக்கு எல்லாவற்றிற்கும் விடை கிடைத்து விட்டது. என்று சொல்கிறார். ஆனால் நீங்கள் அவர் இன்னும் படபடப்போடு இருக்கிறார் என்று சொல்கிறீர்கள்.

**பதில்:** அமைதியாக இருந்தால் எதற்கு பொதுக்குழு கூட்ட வேண்டும்? என்ன அவசியம் ஏற்பட்டிருக்கிறது?

**கேள்வி:** அது தேர்தல் ஆணையத்தின் உத்தரவு. உங்களுக்கு தெரியாமல் இருப்பது அல்ல. வருடத்திற்கு ஒருமுறை கூட்ட வேண்டுமே?

**பதில்:** தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி கூட்ட வேண்டும்தான். ஆனால் இந்த நேரத்தில் கூட்ட வேண்டிய அவசியம் என்ன? ஓ.பி.எஸ். கோயம்புத்தூரில் கூட்டுகிறார் என்றவுடன் அது அவருடைய உரிமை. அவர்கள் எப்பொழுது வேண்டுமென்றால் கூட்டட்டும், எப்படி வேண்டுமானால் போகட்டும். ஆனால் கூட்டப்படுகிற கூட்டத்தில் கூட்டம் எங்களைப் பற்றி விமர்சித்தால் We can’t be silent spectator.

**கேள்வி:** நீங்கள் சொல்கிறீர்கள், வெள்ளம் வரும்போது எதற்கு என்று நீங்கள் சொல்கிறீர்கள்? ஆனால் வெள்ளத்தை வைத்துத்தானே ஆளும் தி.மு.க. அரசை குற்றம் சொல்கிறார். சரியாக கையாளவில்லை என்று சொல்கிறாரே!?

### ஒருவரின் தூக்கத்தால் 200 பிணங்கள்!

**பதில்:** எங்கெங்கே கையாளவில்லை. ஒரே மேடையில் விவாதிக்க தயாரா என்று எங்கள் அமைச்சர்கள் எல்லாம் கேட்டுவிட்டார்கள். ஆனால் ஒன்றை வந்து வசதியாக அனைவருமே மறந்து விடுகிறார்கள். இந்த முறை வந்தது வெறும் மழை மட்டுமல்ல. சென்னையை பொருத்தமட்டிலும் மழை மட்டும் வரவில்லை. புயலும் (சைக்ளோன்) வந்தது. இரண்டும் ஒரு சேர வந்தது இந்த 2023 டிசம்பரில் தான். அதற்கு முன்பு 2015 வந்தது வெறும் மழை மட்டும்தான். அந்த மழையில் கூட முதலமைச்சரை பொதுப்பணித்துறை பொறியாளர்கள் (PWD இன்ஜினியர்ஸ்) எல்லாம் பார்க்க முடியவில்லை. அந்த அம்மாவின் அனுமதி வாங்க முடியாத காரணத்தால், அந்த அம்மா தூங்கிக் கொண்டிருக்கிறார் என்று சாக்குபோக்கு சொல்லி அதிகாரிகளை சந்திக்க விடாததால் அந்த அம்மா ஒருவரின் தூக்கத்தால் ஏறத்தாழ 200 பிணங்கள். மறந்து விடக் கூடாது. எத்தனை பேர் இறந்தார்கள் என்று உண்மை கணக்கு இதுவரை தெரியவில்லை - சொல்லவில்லை. அங்கு வேலை செய்த ஐ.டி. கம்பெனி ஊழியர்கள் எத்தனை பேர் இறந்தார்கள். ஒரே இரவில் பிணக்குவியல் எவ்வாறு இருந்தது?

ஆனால், சென்னையில் பெய்த இந்த மழை சாதாரண மழை அல்ல. 50, 60 வருடங்களுக்கு பின்னால் பெய்த மழை, அளவுக்கு மீறி பெய்த மழைக்கு திட்டமிட்டு ஏற்கனவே வடிகால் அமைத்து இருந்த காரணத்தால்தான் மிகவும் சீக்கிரமாக வடிந்தது. கேட்கிறார்கள் 4000 கோடியில் கட்டினார்களே... என்ன என்று? கேட்பதற்கு அந்த நேரத்தில் நன்றாக இருக்கலாம். ஆனால் கொஞ்சம் மூளையை உபயோகித்து பார்க்க வேண்டும். இந்த கால்வாயில் இருந்து செல்லும் தண்ணீர் கடலுக்குள்தான் சென்று சேர வேண்டும். கடலுக்குள் சென்று சேர்ந்த பிறகு தானே இந்த தண்ணீர் உள்வாங்க முடியும். கடல் வாங்கவில்லையே. கொந்தளிக்கிறதே... மெரினா கடற்கரையில் பிரசிடென்சி காலேஜ் வரையில் அலைகள் வந்ததாக போட்டிருந்தார்கள். தண்ணீரை உள்ளே வாங்கவில்லை. வாங்கியிருந்தது என்றால் இவ்வளவு வந்திருக்காது. அலைகள் ஒய்ந்து அடங்கிபிறகு ஒரே நாளில் சென்றுவிட்டதா? இல்லையா? இதை எல்லோருமே கொஞ்சம் மனசாட்சியோடு பேச வேண்டும். அந்த நேரத்தில் சொன்னால் எடுபடாது. மக்கள் பாதித்திருக்கும்போது இதை சொன்னால் எடுபடாது.

நான் 4 முறை நகராட்சித் தலைவராக இருந்தேன். எனக்குத் தெரியும். பள்ளத்தில்தான் வீடு கட்டியிருப்பார்கள். தண்ணீர் வரும். அந்த நேரத்தில் மழை வந்து தண்ணீர் நிற்கும்போது நாங்கள் சென்றால் கத்துவார்கள். இப்போது வந்துவிட்டீர்களா பார்ப்பதற்கு... நீங்கள் எல்லாம் நன்றாக இருக்க வேண்டும். நாங்கள் எல்லாம் தண்ணீரில் இருக்க வேண்டுமா? அவர்கள் கட்டியது தவறு என்று அவர்களுக்குத் தெரியாது. திட்டுவார்கள்தான். உடனே அந்த தண்ணீர் வடிந்த பிறகு அடுத்த நாள் சென்று பார்த்தால், வாருங்கள் என்று சொல்லி காப்பியே போட்டு தருவார்கள். இது என்னுடைய சொந்த அனுபவம், நான் சொல்கிறேன்.

தளபதி அவர்கள் முதலமைச்சராக வந்த பிறகு மாநகராட்சியுடன் இணைந்த பிறகு அந்த தண்ணீர் வாங்கிவிட்டது. நீங்கள் பார்த்தீர்கள் என்றால், எங்கெங்கு கட்டினார்களோ அங்கெல்லாம் விருகம்பாக்கம் எல்லாம் ஒரு காலத்தில் அப்படி தண்ணீர் இருந்தது. எம்.ஜி.ஆர். ராமாபுரம் தோட்டத்தில் இருந்து செல்ல முடியாமல் கன்னிமாரா ஓட்டலில் தங்கினார். அப்படி ஒரு சூழ்நிலை தமிழ்நாட்டில் இருந்தது. இந்த அம்மையாரே ஹெலிகாப்டரில்தான் சென்று பார்த்தார். ரோட்டில் பார்க்க முடியவில்லை அல்லவா... அப்படி ஒரு சூழ்நிலை. ஆனால் இங்கு மழை பெய்து ஓய்ந்த உடன் அடுத்த நாளே எல்லாரும் இயல்பு நிலைக்கு திரும்பிவிட்டார்கள். சில இடங்களில் இருந்தது. இல்லை என்று சொல்லவில்லை. இன்னும் சில இடங்களில் தவிர்க்க முடியாமல் இருக்கிறது.

### மோடிக்கு மூளையாகச் செயல்பட்டவர்

பள்ளிக்கரணை போன்ற இடங்களெல்லாம் ஏரிகளை தூர்த்து வீடுகளை கட்டி விட்டார்கள். நாங்கள் வந்து 2 வருடங்கள்தான் ஆகியிருக்கிறது. நீங்கள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். நாங்கள் என்னமோ 25 வருடம் ஆட்சியில் இருந்த மாதிரியும் தளபதி மு.க.ஸ்டாலின் இவர் ஆட்சிக்கு வந்து இரண்டரை வருடங்கள்தான் ஆகிறது. அதில் ஒரு வருடம் கொரோனாவில் சென்றுவிட்டது. மீதி இருக்கும் இந்த ஒன்றரை வருடத்தில் ஏற்கனவே சென்னைக்கு ஏற்பட்ட நிலையை மனதில் வைத்துக் கொண்டுதான் திட்டம் போட்டார். யாரை வைத்து போட்டார்? மறந்து விடக்கூடாது.

திருப்புகழ் என்கிற ஒருவர். யார் அந்த திருப்புகழ்? வெளிப்படையாக சொல்ல வேண்டும் என்றால், நரேந்திர மோடியின் மூளையாக 25 வருடங்கள் செயல்பட்டவர். குஜராத்தின் முதலமைச்சராக நரேந்திர மோடி இருந்தபோது, அவர்தான் அங்கு தலைமைச் செயலாளராக இருந்தவர். அவர்தான் மோடிக்கே மூளை என்று சொல்வார்கள்.

அதனால்தான் அவர் பிரதம மந்திரி ஆனதும், இந்த திருப்புகழை பிரதம மந்திரி அலுவலகத்திற்கு கொண்டு சென்று வைத்துக்கொண்டார். அவருடைய ஆலோசனையை பெற்றுத்தான் செய்தோம். எங்களை குறை சொல்கிறார்கள் என்று சொன்னால், மோடியையே குறை சொல்வதாகத்தான் அர்த்தம்.

மோடிக்கு மூளையாக பயன்பட்டவரே, அவர் சரியில்லை என்று குற்றம் சொன்னார்கள் என்றால், எங்கள் மீது இல்லை, மோடி மீதுதான் தவறு. . காரணம் என்னவென்றால் அவருடைய அலுவலகத்தில் இருந்து பயிற்சி பெற்றவர். ஒரு அனுபவம் வாய்ந்த அதிகாரி. அதனால் அவரை வைத்துத்தான் செய்தோம். தி.மு.க. ஒன்றியச் செயலாளரையோ, மாவட்டச் செயலாளரையோ வைத்து அறிக்கை வாங்கி செய்யவில்லை. இதையெல்லாம் யோசித்து பார்க்க வேண்டும். குறை சொல்ல வேண்டும் என்பதற்காக குறை சொல்வது வேறு. நாங்கள் கூட எதிர்க்கட்சியில் இருந்தோம்.

கலைஞர் எப்போதும் இவ்வாறுதான் சொல்வார்கள். ஒரு குற்றச்சாட்டு சொல்வதற்கு முன்பு, அதை மனசாட்சி அனுமதிக்க வேண்டும். ஒரு குற்றச்சாட்டு சொல்கிறபோது அது நடந்திருக்குமா என்று உன் மனசாட்சி சொல்ல வேண்டும் என்பார். அதற்குப் பிறகுதான் அந்த குற்றச்சாட்டை சொல்ல வேண்டும். குற்றம் சாட்டலாம் யார் வேண்டுமானாலும் குற்றம் சொல்லலாம். அது ஆக்கப்பூர்வமாக இருக்க வேண்டும்.

**கேள்வி:** உங்கள் அறிக்கையை பார்க்கும்போது, இன்னொரு கேள்வி வந்தது. எங்களை திட்டினீர்களே... பி.ஜே.பி.யை திட்டினீர்களா? என்று கேட்கிற மாதிரி இருக்கிறதே?

**பதில்:** ஆமாம். அவர்கள் பி.ஜே.பி.யை திட்டுகிற மாதிரி நடிக்கிறார்கள். அவர்கள் உளப்பூர்வமாக, வன்மையாக கண்டிக்கிறேன் என்று சொன்னாலும் எங்களை எந்த வேகத்தில் திட்டுகிறீர்களோ...அதே வேகத்தில் அவர்களை திட்ட வேண்டுமா? இல்லையா? திட்டுவது உண்மையாக இருந்தால், இங்கு ஒரு தொனி (டோன்) அங்கு வேறு ஒரு தொனி இருக்கக் கூடாது அல்லவா... அங்கே குரல் ஏன் மாறுகிறது.

**கேள்வி:** இது சம்பந்தப்பட்ட நேரடியான மாநில அரசாங்கம்?

**பதில்:** நமக்கு பணம் கொடுக்காதவர்களே அவர்கள்தானே... நமக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்கவில்லை. அவர்கள்தான் பணம் கொடுக்க வேண்டும். கேட்டதைக் கொடு என்று சொல்கிறீர்கள் அல்லவா... அப்பொழுது உணர்வுப்பூர்வமாக கேட்க வேண்டாமா?

**கேள்வி:** மாற்றாந்தாய் மனப்பான்மை என்று ஒரு வார்த்தையை பயன்படுத்திருக்கிறாரே?

**பதில்:** மாற்றாந்தாய் மனப்பான்மை என்று சொன்னார் அல்லவா... மோடி அரசை வலியுறுத்துகிறேன். வார்த்தைகளில் ஜாலங்கள் அதிகமாக இருக்கிறது. அவரை கெஞ்சுவது போல, நான் உப்புக்குச் சப்பாணியாகத்தான் கேட்கிறேன். நீங்கள் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம். இங்கு நான் அரசியல் செய்ய வேண்டும். இல்லை என்றால், எங்களை வேறு மாதிரி செய்து விடுவார்கள்.

அதனால் இப்படி சொல்கிறேன் என்று சொல்வதுபோல்தான் அது இருந்தது. ஆனால் உண்மையை நாட்டில் எவ்வளவு நாள் ஏமாற்ற முடியும்?

இப்போது நாடாளுமன்றத் தேர்தல் வரப்போகிறது. மக்களுக்கு தெரியத்தான் போகிறது. இவர்களுடைய உண்மை முகம் வெளியே வரப்போகிறது. நிச்சயமாக சொல்கிறேன், நிச்சயமாக அவர்கள் பி.ஜே.பி.யை ஆதரிப்பார்கள். அண்ணாமலை இவ்வளவு தைரியமாக பேசுவதற்கு என்ன காரணம்? அவரும் இவரை விமர்சித்து பேச மாட்டேன் என்கிறார். அதாவது திரை மறைவில் ஏதோ நடந்து கொண்டிருக்கிறது. மக்களை இன்னும் பைத்தியக்காரன் என்று நினைக்கி றார்கள்.

**கேள்வி:** இப்போதுதான் பிரிந்திருக் கிறார்கள். விமர்சிப்பதற்கு இன்னும் கொஞ்ச நாள் ஆகும் அல்லவா...

**பதில்:** பிரிந்த உடனேயே தான் அதிகம் கோபம் வரும். எம்.ஜி.ஆர். எங்கள் கட்சியில் இருக்கும் வரை எங்களை ஓஹோ என்று பாராட்டினார். ஆனால் சென்ற உடன் எவ்வளவு வலிமையாக திட்டினார். எப்போதும் அப்படித்தான். ஓ.பி.எஸ். இதுவரையில் அவர்களுடன் பேசிக் கொண்டுதான் இருந்தார். இப்போது அவர்களை கடுமையாக திட்டுகிறாரா? இல்லையா... என்ன காரணம்? உடனேயேதான் கோபம் வரும். நீங்கள் பார்த்தீர்கள் என்றால், கட்சியில் இருந்து சென்றவுடன் முதலில் பிரிந்த பிறகுதான் கோபம் அதிகமாக இருக்கும். பிறகு செல்ல செல்ல இவ்வாறெல்லாம் இருந்தோமே என்று குறையும்.

**கேள்வி:** எனவே இதுவரைக்கும் பெரிய கோபம் வரவில்லை என்பதால் சந்தேகம் வருகிறது?

**பதில்:** பெரிய கோபம் இல்லை, கோபமே வரவில்லை.

### குள்ள நரித்தனம் - அரசியல் சூழ்ச்சி

**கேள்வி:** ஆனால் இன்னொரு பக்கம் யோசிக்க வேண்டியிருக்கிறது. எதிர்க்காமலேயே இருந்தவர், வலியுறுத்துகிறோம் என்ற அளவிற்காவது வந்திருக்கிறார் என்று நினைக்கிறீர் களா?

**பதில்:** அதுதான் அவருடைய குள்ள நரித்தனம். அரசியல் சூழ்ச்சி அதுதான். மைனாரிட்டிஸ் ஓட்டைப் பிரித்து ஏமாற்ற முடியுமா? அது மாதிரி செய்யுங்கள் என்று அனைத்து வழிகாட்டுதலும் அங்கிருந்துதான் வருகிறது. இன்றைக்கு பி.ஜே.பி. அனைத்து ஊடகங்களையும் வாங்கி விட்டது. அனைத்து ஊடகங்களிலும் அதானி 40 முதல் 50 சதவிகிதம் பங்கு போட்டிருக்கிறார். பத்திரிகைகள் எல்லாம் சென்றுவிட்டது. அனைத்துத் துறையும் அமலாக்கத் துறையின் (ED ) கையில். சி.பி.ஐ. எதற்காக பயன்படுத்துகிறார்கள்? எதிர்க்கட்சிக்காரனை கைது செய்கிறீர்கள். தூக்கிப் போடுகிறீர்கள். வழக்கு போடுகிறீர்கள்.

இன்றைக்குக்கூட வாட்ஸ்அப்இல் ஒரு செய்தி வந்தது. சேலம் ஆத்தூர் பக்கத்தில் ஒரு விவசாயிக்கு அமலாக்கத் துறை (ED) நோட்டீஸ் அனுப்பி இருக்கிறதாம். என்ன என்று கேட்டால், அவரின் பக்கத்து நிலத்தின் உரிமையாளர் பிஜேபிக்காரராம். அவரின் நிலத்தை அவர் கேட்டு கொடுக்கவில்லை என்றவுடன், அமலாக்கத்துறையிலிருந்து சம்மன் வந்தது என்று அந்த வயதானவர் சொல்கிறார். அவர் பள்ளர் சமுதாயம் என்று சொல்கிறார். அந்த சமுதாயத்தைச் சார்ந்தவர் என்று சொல்கிறார். பி.ஜே.பி. காரரை வேறொரு மேல் ஜாதிக்காரர் என்று சொல்கிறார். இந்த இடத்தை எடுக்க வேண்டும் என்று கேட்டார். நான் கொடுக்கவில்லை என்றதும் எனக்கு ஈ.டி சம்மன் வந்திருக்கிறது என்று சொல்கிறார். இது எவ்வளவு உண்மை என்று எனக்கு தெரியவில்லை. ஆனால் வாட்ஸ்அப்இல் செய்தி வந்திருக்கிறது. அந்த அளவுக்கு கேவலமாக சென்று விட்டது.

### தோல்வி சாமி

**கேள்வி:** நீங்களும் ஒரு நீண்ட அரசியல் அனுபவம் வாய்ந்தவர். அரசியல் கட்சி என்றால் வெற்றி தோல்வி என்பது சகஜம்தான். இருந்தாலும் அவர் 7, 8 தோல்வி அடைந்து விட்டார் என்பதற்காக அவரை தோல்வி சாமி என்று சொல்வதெல்லாம் சரியாக இருக்குமா?

**பதில்:** அவர் எங்களைப் பார்த்து விடியா அரசு விடியா அரசு என்று சொல்கிறாரே... அதற்கு ஒரு பொருத்தமான பதில் சொல்லித்தானே ஆக வேண்டும். அவர் என்னமோ வந்ததிலிருந்து வெற்றி மேல் வெற்றி காட்டி அந்தக் கட்சியை நிறுத்தியவர் என்று நினைக்கிறாரா!? அவர் என்றைக்கு அந்த சீட்டில் உட்கார்ந்தாரோ அதிலிருந்து முழுதுமாக ஒன்றொன்றாக காலியாகிக் கொண்டுதானே வருகிறது. நாடாளுமன்றத் தேர்தலில் ஜீரோ. ஒன்றே ஒன்று தப்பித்தது. அதுவும் இப்போது இல்லாமல் சென்றுவிட்டது. கொஞ்சம் ஓட்டில் வெற்றி பெற்றார் ஓ.பி.எஸ்.இன் மகன். அதற்கு அடுத்து சட்டசபை தேர்தலில் வெற்றி பெறுகிறோம். அவர் முதலமைச்சராக இருக்கும் போதே உள்ளாட்சித் தேர்தலில் நாங்கள் வெற்றி பெற்றோம். அவர்கள் அனைத்தையும் குத்தி குத்தி ஓட்டு போட்டே 60 சதவிகிதம் நாங்கள் வெற்றி பெற்றோம். இதே மாதிரி கடும் குளிர் நேரத்தில்தான் தேர்தல் நடந்தது. தளபதி இரவு கோர்ட்டில் உத்தரவு வாங்கி மாநிலத் தேர்தல் ஆணையத்தின் முன் நாங்கள் எல்லாம் உட்கார்ந்து மறியல் செய்து ஓட்டு என்ன வைத்து அதில் 60 சதவிகிதம் வெற்றி பெற்றோம்.

எங்கள் கட்சித் தலைவர் தளபதி அவர்கள் நேராக வந்து மாநில தேர்தல் ஆணையத்தின் முன்பே மறியல் செய்து உடனடியாக எண்ணுங்கள் என்று சொன்ன பிறகுதான், எண்ணினார்கள். அவ்வளவு செய்தும்கூட 60 சதவிகிதம் நாங்கள் வெற்றி பெற்றோம். ஒழுங்காக தேர்தல் நடந்திருந்தால் எடப்பாடி இருக்கும்போதே நூற்றுக்கு நூறு அப்போதே வெற்றி பெற்றிருப்போம். அதற்கடுத்து எம்.எல்.ஏ. தேர்தல் வருகிறது. வெற்றி பெற்றோம். அதற்கடுத்து நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் வருகிறது. அதிலும் வெற்றி பெற்றோம். தொடர்ச்சியாக நீங்கள் தோற்றுக் கொண்டுதான் வருகிறீர்கள். அதற்குப்பிறகு அவரை வேறு என்ன சாமி என்று சொல்வது... ஆமாம் சாமி என்று சொல்வதா? ஐயப்ப சாமி என்று சொல்வதா? என்ன சாமி என்று சொல்ல சொல்கிறீர்கள்.

**கேள்வி:** இதுவரைக்கும் தோல்வி சாமி என்று பொருந்தும். ஆனால் இதற்குப் பிறகு அவர் சொல்கிறார். இனிமேல் வரப்போகும் தேர்தல் எல்லாம் அ.தி.மு.க. கூட்டணிதான் வெற்றி பெறும். மக்கள் எப்போது அ.தி.மு.க. வெற்றி பெறும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறாரே?

**பதில்:** அவர் கற்பனையில் ஓடிக் கொண்டிருக்கிறார். நான் சொல்லவில்லை. அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு அவர் வெளியில் இருக்கிறாரா என்று பாருங்கள். பீகார் ஜெயிலில் இருப்பார் என்று அவர் கூடவே அமைச்சராக இருந்த ஓ.பி.எஸ். சொல்கிறார். நான் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டேன் என்பதற்காக சில ரகசியங்களைச் சொல்ல முடியவில்லை என்று சொல்கிறார். இன்னும் கொஞ்சம் அவர் வேகமாகப் பேசினால் அதுவும் வெளியில் வந்து விடும். பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது என்றால், இந்த குட்டிகள் எல்லாம் திகாரா? பாளையங் கோட்டையா? என்று நமக்கு தெரியவில்லை.




> **நாங்கள் சாமர்த்தியமாகச் செயல்பட்டதன் விளைவு, உயர்நீதி மன்றத்தில் வழக்கு காலை 10.15 மணி வரையிலும் நடைபெற்றதால், உச்சநீதிமன்றத்தால் அன்றே அவர்களால் வழக்கு குறித்து அங்கு குறிப்பிட முடியவில்லை. இல்லை என்றால் கலைஞருக்கு இது கிடைத்திருக்காது. அவ்வளவு தூரம் செய்தார் இந்த எடப்பாடி. செய்தாரா? இல்லையா? இதை பத்திரிகைகள் எல்லாம் கூட பெரிதாக போடவில்லை. காரணம் என்னவென்றால், கலைஞருக்கு இடம் கிடைத்தது என்ற செய்தியோடு நிறுத்திவிட்டார்கள். தவிர, இவ்வளவு தூரம் நடந்த பின்னணியை யாரும் எழுதவில்லை. நடந்ததா? இல்லையா? என்று எடப்பாடி சொல்லட்டும். நான் உங்கள் மூலமாக சவால் விடுகிறேன். இங்கு உத்தரவு போட்டால் உச்சநீதிமன்றத்தில் அதற்கு தடை உத்தரவு வாங்குவதற்கு நடவடிக்கை எடுத்தாரா? இல்லையா? என எடப்பாடி சொல்லட்டும். நான் நிரூபிக்கிறேன்.**

தொடர்ச்சி 11 ஆம் பக்கம்

## அ.தி.மு.க. - பா.ஜ.க. இடையே திரைமறைவில் ஏதோ நடைபெறுகிறது!

# அ.தி.மு.க.வினரைத் தக்க வைக்கவே எடப்பாடி பொதுக்குழுவைக் கூட்டினார்!

## ஆர்.எஸ்.பாரதி பேட்டி... 10 ஆம் பக்கத் தொடர்ச்சி

**கேள்வி:** ஆனால் அவர் திரும்ப சவால் விடுகிறார். அடுத்து நாடாளுமன்றத் தேர்தல் வருகிறது. சட்டமன்றத்தில் இருக்கும் ஆளுங்கட்சி முன்வரிசை அனைத்தும் காணாமல் சென்றுவிடும் என்று சொல்கிறாரே?

**பதில்:** இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், ஒரு வழக்கு பொன்முடி வழக்கில் கீழ் கோர்ட்டில் விடுதலை ஆகிவிட்டது. உயர்நீதி மன்றம் தண்டனை கொடுத்துள்ளது. அதற்குள் நான் செல்லவில்லை. இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செல்ல இருக்கிறது. கீழ் கோர்ட்டில் விடுதலையே ஆகிவிட்டோம். பார்ப்போம், நிச்சயமாக எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. நீதி நிலைநாட்டப்படும். எங்களிடம் ஒரு நல்ல நம்பிக்கை இருக்கிறது. எங்களுக்கு எந்தவிதமான பயமும் இல்லை. இப்போது உடனடியாக ஜெயலலிதா போல, கொடியை கழட்டு, இதை கழட்டு என்று ஜெயிலுக்குச் செல்லவில்லை. அவ்வாறு ஜெயிலுக்கு சென்ற அம்மையார் பெயரில் கட்சி வைத்து நீங்கள் நடத்தும்போது!? ஒன்று மட்டும் தெரிந்து கொள்ளுங்கள்.

எமர்ஜென்சி நேரத்தில் கலைஞர் கூட இருந்த அனைவரையும் விட்டுவிட்டு கலைஞரையே குறியாக வைத்து அவர்மீது வழக்கு போட்டார்கள். அதுதான் சைக்காலஜி. இந்திரா காந்தி மீதுதான் போட்டார்கள். மற்றவர்கள் மேல் எல்லாம் போடவில்லை. காரணம், லீடர் தவறு செய்திருக்கிறாரா என்று பார்ப்பார்கள். எங்கள் லீடர் மீது எதுவுமே போட முடியவில்லை. உங்கள் ஆட்சி தான் இருந்தது. எங்கள் ஆட்சியில் அவர் மினிஸ்டராக இருந்தபிறகு உங்கள் ஆட்சி வந்தது. அவர் மேல் கேஸ் போட முடியவில்லை. மேயராக இருந்தார். பல பொறுப்புகளில் இருந்தார். ஒன்னும் செய்ய முடியவில்லை. கேஸ் போட முடியவில்லை.

ஒன்றுமட்டும் சொல்கிறேன். அதற்காக பொன்முடியை நான் விட்டுக் கொடுக்கவில்லை. பொன்முடி எங்கள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர். ஆனால் பொது மக்கள் மத்தியில் ஒரு தலைவர் தவறு செய்தார் ஊழல் செய்தார் என்றால்தான் தாக்கம் இருக்கும். உங்கள் தலைவி 4 வருடம் தண்டனை வாங்கிய பிறகும் நீங்கள் தலை மேல் தூக்கி வைத்து ஆடுகிறீர்கள் என்று சொன்னால் எங்களுக்கு அப்படி ஒரு நிலைமையே வரவே இல்லை.

**கேள்வி:** அரசியல் விமர்சகர்கள் எல்லாம் ஒரு பார்வை வைக்கிறார்கள். என்னவென்றால், தி.மு.க. - அ.தி.மு.க. என்று மட்டும் தான் தமிழ்நாடு அரசியல் இருந்தால் சரியாக இருக்கும். அந்த இடத்தை எடப்பாடி ஒரு அளவிற்கு தொட்டுவிட்டார் என்று நினைக்கிறீர்களா? குறைந்தபட்சம் ஒரு எதிர்க்கட்சியாகவாவது செயல்படத் தொடங்கி விட்டாரா? அது ஒரு வகையில் நல்லது தானோ?

**பதில்:** நான் பலமுறை சொல்லிவிட்டேன். அ.தி.மு.க. - தி.மு.க. என்பது பங்காளி கட்சி தான். அது காலப்போக்கில் பார்த்தீர்கள் என்றால், அ.தி.மு.க.வில் இருப்பவர்களில் எம்.ஜி.ஆரோடு சென்றவர்கள் எம்.ஜி.ஆர். இறந்த பிறகு பாதி பேர் வந்து விட்டார்கள். அந்த கட்சிக்கு அவர் நிறுவனத் தலைவர்.. அவர்கள் எல்லாம் அவரின் மறைவிற்குப் பிறகு எங்கள் அணிக்கு வந்து விட்டார்கள். எம்.ஜி.ஆர். சென்றபோது பிரிந்து சென்றவர்கள் எம்.ஜி.ஆர். மறைந்த பிறகு 50 முதல் 60 சதவிகிதம் வந்துவிட்டார்கள். எம்.ஜி.ஆரை பார்த்திருக்கவே மாட்டார்கள். நான் எல்லாம் எம்.ஜி.ஆரு டன் பழகியவன். எம்.ஜி.ஆருக்கு தேர்தல் வைப்புத் தொகை செய்தவன். எம்.ஜி.ஆரின் செல்லப் பிள்ளையாக நானும் - துரைமுருகனும் இருந்தோம். நாங்கள் இதே கட்சியில் இருந்து விட்டோம்.

ஆனால் அவர்கள் எம்.ஜி.ஆரைப் பார்க்காதவர்கள் எல்லாம் சென்றார்கள். எம்.ஜி.ஆர். மறைந்தபிறகு வந்துவிட்டார்கள். காரணம் அன்றைக்கு இருந்த எம்.ஜி.ஆர். பிரிந்தது துரதிஷ்டம். அவர் பிரிக்கப்பட்டார். அவர் பிரிவினைக்கு யார் காரணமாக இருந்தார்களோ அவர்கள் எல்லாம் அவரிடம் பிறகு சேர்ந்து கொண்டார்கள். நான் அவர்கள் பெயர்களை எல்லாம் சொல்ல வில்லை. யார் யார் எம்.ஜி.ஆரை கட்சியை விட்டு நீக்க வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்றார்களோ அவர்கள் எல்லாம் ஒரு தேர்தலில் தோற்ற உடன் மொத்தமாக அங்கு சென்று மந்திரியாக பதவி வாங்கி விட்டார்கள்.

ஆனால் கட்சியில் தன்னந்தனியாக நின்று பேராசிரியரின் துணையோடு நின்று இந்தக் கட்சியை தூக்கி 50 வருடம் நிறுத்தி மீண்டும் ஆட்சியில் உட்கார வைத்து கலைஞர் அவர்கள் நிறுத்தினார். இல்லையென்றால் இந்த கட்சி அப்போதே சென்றிருக்கும். நெருக்கடி நிலையிலேயே கட்சி எல்லாம் சென்றிருக்கும், சின்னம் எல்லாம் சென்றிருக்கும், எல்லாமே சென்றிருக்கும். எல்லாவற்றையும் காப்பாற்றிக் கொடுத்து விட்டார் கலைஞர். அவர் எம்.ஜி.ஆர். போக வேண்டும் என்று விரும்பவே இல்லை.

### திராவிட இயக்க உணர்வுகள்

**கேள்வி:** நீங்கள் எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. ஜெயலலிதா அ.தி.மு.க. அதோடு எடப்பாடி அ.தி.மு.க.வை வேறு மாதிரி பார்க்கிறீர்களா?

**பதில்:** நிச்சயமாக, அங்கு இருந்து கொண்டு தளபதியை முன்பு கிண்டல் செய்தவர்களெல்லாம் ஜெயலலிதா மறைந்த பிறகு தளபதி என்றே சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். அ.தி.மு.க. விலும் பாதி பேர் சொல்லவே ஆரம்பித்து விட்டார்கள். அதனுடைய விளைவு நீங்கள் பார்த்தீர்கள் என்றால், கலைஞரின் இறுதி ஊர்வலத்திற்கு முன்பு ராஜாஜி ஹாலில் பார்க்க வந்தார்கள். அவர்களில் பலர் அ.தி.மு.க.வின் ஆட்கள் ஜெயலலிதா படத்தை கையில் பச்சை குத்தி இருந்தார்கள். ஜெயலலிதா இறந்த பிறகு நமக்கு வேறு போக்கு இல்லை. இவர்தான் நமக்கு என வந்தார்கள். என்ன இருந்தாலும் இங்கிருந்துதானே சென்றோம் என்ற உணர்வு இருந்தவர்கள் எங்கு சென்றாலும் மீண்டும் இங்கு தான் வருவார்கள்.

திராவிட இயக்க உணர்வுகள், எந்த நோக்கத்துக்காக இந்த கட்சி ஆரம்பிக்கப்பட்டதோ அந்த உணர்வாளர்கள் எங்கிருந்தாலும் அதிக நாட்கள் வெளியில் இருக்க முடியாது. அப்பாவிடம் கோபித்து வெளியே சென்று விட்டு பிறகு அப்பாவிடம் வந்து தஞ்சமடையவில்லையா. அதுபோல்தான் கோபித்துக் கொண்டு சென்றவர்கள் பலபேர் திரும்ப வந்துவிட்டார்கள். மீதமுள்ள வ ர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்.

**கேள்வி:** தோல்வி சாமி என்ற பட்டம் தொடரும் என்று நினைக்கிறீர்களா!?

**பதில்:** நிச்சயமாக, அதில் சந்தேகமே கிடையாது. தோல்வி சாமியோடு நின்றால் சரி. இன்னும் அடுத்த தேர்தல்கள் எல்லாம் பார்த்தீர்கள் என்றால் டெபாசிட் போன சாமி என்றுகூட சொல்லலாம். அந்த அளவிற்கு அவர் அந்த கட்சியை கரைத்துவிடுவார். அதில் ஒன்றும் யாரும் பிடிப்போடு இருப்பது போன்று தெரியவில்லை.

**கேள்வி:** அ.தி.மு.க. தொண்டர்களுக்கே எதிராகத்தான் இருக்கிறார் என்கிறீர்களா?

**பதில்:** நீங்கள் அந்த பொதுக்குழுவை பார்த்தீர்கள் என்றால், வழக்கமாக ஜெயலலிதா வரும்போது எவ்வாறு ஆரவாரம் இருக்கும்? எவ்வளவு இளைஞர்கள் இருப்பார்கள்? பாதி பேர் கைத்தாங்கலாகத்தான் பொதுக்குழு வந்தார்கள். நான் பார்த்தேன். தவறாக சொல்லவில்லை. எனக்கும் வயது 77 ஆகிறது. வயதானவர்கள் கட்சியில் இருக்க கூடாது என்று சொல்லவில்லை. ஆனால் அந்த உணர்வுள்ள கூட்டம் இப்போது இல்லை.

கட்சியில் இருக்கிறோம், அவர்கள் அழைத்தார்கள். நாங்கள் வந்தோம் போனோம் என்று இருக்கிறார்களே தவிர, ஒரு வேகமாகவோ, விவேகமாகவோ அந்த கட்சியில் இல்லை. யாரும் பிடிப்போடு எடப்பாடி அணியில் இல்லை. வேறு என்ன வழி? அரசியலுக்கு வந்துவிட்டோம். கட்சியில் இருந்துவிட்டோம். எனவே சாகும் வரை இங்கேயே இருந்து விட்டு செல்வோம் என்று ஒரு குழு அப்படியே இருக்கிறார்கள். இவ்வாறுதான் இருக்கிறார்கள். புதிதாக யாரும் சேர்கிறார்களா? புதிதாக யாரும் வருகிறார்களா என்றால் வரவில்லை. ஒன்று இவருக்கு பேச்சுத் திறமை இருக்க வேண்டும். இவரோ தெருச் சண்டை போடுவதுபோல்தான் பேசுகிறார். திடீரென்று தைரியம் இருக்கிறதா என்கிறார், இதெல்லாம் ஒரு தலைவருக்கு வரலாமா?

**கேள்வி:** எடப்பாடி பழனிசாமியை நினைத்து ஒரு வகையில் வருத்தப்படுகிறீர்களோ, ஏதாவது ஒன்று செய்யுங்கள் என்று?

**பதில்:** பாவம்தான் அவர். தன் கையில் இருக்கும் பணத்தைப் போட்டுவிட்டு வந்து விட்டார். எவ்வளவு நாள் பணத்தை கொடுத்து கட்சியை காப்பாற்ற முடியும். ஒன்று சொல்கிறேன், தொண்டர்களோ அல்லது அமைப்புரீதியாக இருப்பவர்களோ உணர்வுப்பூர்வமாக இருந்தால்தான் அவர்கள் நீடிப்பார்களே தவிர, கொண்டு வந்து வைப்பவர்கள் இங்கு இல்லை என்றால் அடுத்து யார் அதிகமாக ஏலம் கேட்கிறார்களோ அங்கு சென்று விடுவார்கள், இது தான். PURCHASE POLITICS (ஏல அரசியல்) என்று சொல்வார்கள் அல்லவா அதே போன்று விலை போகக் கூடியவர்கள் எங்கு இருந்தாலும் அவர்களை எளிதாக வாங்கிவிடுவார்கள். நான் கொடுத்த விலைக்கு என்னிடம் வந்தார்கள் என்றால், அடுத்து யார் விலை கொடுக்கிறார்களோ அங்கு சென்றுவிடுவார்கள்.

என்னைக் கேட்டால், அதுதான் அவரிடம் இன்று இருக்கிறது. இன்றைக்கு பாருங்கள், ஏதாவது ஒரு வழக்கில் வேலுமணி வீட்டை சோதனை செய்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள், அமலாக்கத்துறை புகுந்தது என்றால் 90 சதவிகிதம் ஈ.பி.எஸ் அணியில் இருப்பவர்கள், ஓ.பி.எஸ். இடம் செல்வார்களா இல்லையா என்று பாருங்கள், செல்வார்கள். நிச்சயமாக நடக்கும்.

காரணம் என்னவென்றால் அவர்களுக்கு அவரும் நம்ம ஆளுதான் இவரும் நம்ம ஆளுதான்., அவரும் அம்மா என்கிறார் இவரும் அம்மா அம்மா என்கிறார். இங்கு இருப்பதற்கு பதில் அங்கு சென்று இருக்கலாம் என்று வந்து விடுவார்கள். அதுதான் வரும். எவ்வாறு இங்கிருந்து நாவலரும் மற்றவர்களும் கலைஞரை விட்டு எம்.ஜி.ஆர். இடம் சென்றார்களோ, அதே மாதிரி செல்வார்கள். வரலாறு திரும்பும். இது எல்லாம் பார்க்கத்தான் போகிறோம்.

**கேள்வி:** எம்.ஜி.ஆர். செய்த வரலாறு. இப்போது அவர்கள் கட்சிக்கே திரும்புவதற்கான வாய்ப்புகள் இருக்கிறதோ?

**பதில்:** இந்தக் கட்சிக்கு துரோகம் செய்து விட்டுச் சென்றார் அவர். அதற்குப் பிறகு அந்த கட்சி நிற்க முடியவில்லையே. நான்கு கூறாக ஆகிக்கொண்டு தானே சென்று கொண்டிருக்கிறது. எப்படி இருந்தாலும் ஒட்ட வைத்தாலும் இரண்டு உருவம் தான் தெரியும். எவ்வளவு நாள் ஒட்ட வைத்து ஓடிக் கொண்டிருப்பீர்கள். அடிக்கடி உடைகிறது. ஒட்ட வைக்கிறீர்கள். மறுபடியும் உடைகிறது. இப்போது 4ஆக உடைந்திருக்கிறது. மோடி தேர்தலின் போது ஏதாவது செய்தார் என்றால், இனிமேல் அந்த தொண்டர்கள் அங்கு இருக்க மாட்டார்கள். தளபதியின் செயல் எல்லாரையும் கவர்ந்திருக்கிறது. அவருடைய பெருந்தன்மைக்கு என பலவற்றை சொல்லலாம்.

இன்றைக்கு வெளிப்படையாக சொல்கிறேன். விஜயகாந்தின் மறைவை யாரும் எதிர்பார்க்கவில்லை. அவர் மறைந்த உடன் அரசு மரியாதை என்றார். நான் நினைத்துப் பார்க்கிறேன். 5 முறை முதலமைச்சராக கலைஞர் இருந்தார். 13 சட்டமன்ற சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். அவருக்கு வீடு தேடி சென்று எடப்பாடியிடம் எங்கள் தலைவரின் குடும்பம், தளபதி தலைமையில் சென்று கேட்டார்கள். போகும்போதே எங்களுக்கு தெரியும் எடப்பாடி பழனிசாமி கொடுக்க மாட்டார் என்று. ஆனால் முடியாது என்று சொல்லி அனுப்பினார். நீதிமன்றம் சென்று தீர்ப்பு வாங்கினோம். கலைஞரோடு விஜயகாந்த்தை நான் ஒப்பீடு செய்யவில்லை. ஆனால் யாருமே கேட்கவில்லை. முதல்வர் அங்கு சென்று பார்த்து வந்தவுடன் சட்டென்று சொன்னார் விஜயகாந்தின் இறுதிச் சடங்கு அரசு மரியாதை உடன் நடைபெறும் என. அதுதான் ஒரு பெரிய தலைவருக்கு அடையாளம். இது இந்தியாவிற்கே வழிகாட்டுகிறது. மற்ற மாநில முதலமைச்சர்களும் இந்த மாதிரி எதிர்கட்சி தங்களை தாக்கிப் பேசினாலும், விமர்சித்தாலும்கூட அவர்களுடைய அரசியல் பயணத்தை அங்கீகரித்து அவர்களுக்குரிய மரியாதையை இறுதி காலத்தில் செலுத்த வேண்டும் என்று ஒரு வழிகாட்டிபோல தளபதி அமைந்துவிட்டார்.

### பல பேருக்குத் தெரியாத ரகசியம்!

**அது மட்டுமல்ல, விஜயகாந்த் உடல் வைக்கப்பட்டு இருந்த இடத்தில் இட-நெருக்கடி என்றவுடன் உடனடியாக தீவுத்திடலில் இடம் கொடுத்து, உடனே காவல்துறை வைத்து ஒருங்கிணைத்து இறுதி ஊர்வலம் சென்றது. அவர்கள் குடும்பமோ, கட்சிக்காரர்களோ யாரும் கேட்கவில்லை. இங்கு வந்து எல்லா-ரும் கேட்டு, முடியாது என்று நீதிமன்-றத்தில் கொடுக்கவே கூடாது என்று சொல்லிவிட்டு எடப்பாடி ஒற்றைக் காலில் நின்று, இங்கிருக்கும் அரசு தலைமை வழக்கறிஞரை வைத்துக்-கூட வாதாடாமல் அதற்கென்று ஒரு தனி வக்கீலை பல லட்சம் கொடுத்து அழைத்து வந்தது மட்டுமல்ல! பல பேருக்கு இந்த ரகசியம் தெரியாது.**

இங்கு சாதகமான தீர்ப்பை இந்த நீதிபதி சொல்லிவிடுவார் என்று யூகித்து உச்ச நீதிமன்றத்தில் காலை 10 மணிக்கு வழக்கைத் தாக்கல் செய்வதற்கு இரவோடு இரவாக தயார் செய்து வைத்து விட்டார்கள். ஏனென்றால் 10 மணிக்கு குறிப்பிட்டால்தான் அன்றைக்கு அந்த வழக்கை அவசரமாக எடுக்க (Hear) முடியும் அங்கு எல்லாம் தயாராக இருந்தது. அங்கு ஒரு மூத்த வழக்கறிஞரை ஏறத்தாழ 30, 40 லட்சம் ரூபாய்க்கு மேல் தொகை கொடுத்து, அவரை ஒரு நாள் வாதாட தயார் செய்து விட்டார்கள். இங்கு உத்தரவு போடப் போகிறார் நீதிபதி என்று மோப்பம் செய்து விட்டார்கள். ஏனென்றால் அவர் பேசியது, இந்த வழக்கை நான் ஒரு வாரம் தள்ளிப் போடட்டுமா? நான் இந்த வழக்கை முடிக்கவில்லை என்றால் உள்நாட்டு போர் வரும் என்று நீதிபதி சொன்ன பிறகு, எப்படியும் இடம் கொடுத்து விடுவார்கள் என்று தெரிந்து உடனடியாக உச்ச நீதிமன்றத்திற்கு இரவோடு இரவாக வக்கீலை உறுதிசெய்து வைத்திருந்தார்கள்.

நல்லவேளை, நாங்கள் சாமர்த்தியமாக செயல்பட்டதன் விளைவு, அந்த வழக்கு 10.15 வரையிலும் நடைபெற்றதால், உச்சநீதிமன்றத்தால் அன்றே அவர்களால் வழக்கு குறித்து அங்கு குறிப்பிட முடியவில்லை. இல்லை என்றால் கலைஞருக்கு இது கிடைத்திருக்காது. அவ்வளவு தூரம் செய்தார் இந்த எடப்பாடி. செய்தாரா? இல்லையா? இதை பத்திரிகைகள் எல்லாம் கூட பெரிதாக போடவில்லை. காரணம் என்னவென்றால், கலைஞருக்கு இடம் கிடைத்தது என்ற செய்தியோடு நிறுத்திவிட்டார்கள் தவிர, இவ்வளவு தூரம் நடந்த பின்னணியை யாரும் எழுதவில்லை. நடந்ததா? இல்லையா? என்று எடப்பாடி சொல்லட்டும். நான் உங்கள் மூலமாக சவால் விடுகிறேன். இங்கு உத்தரவு போட்டால் உச்சநீதிமன்றத்தில் அதற்கு தடை உத்தரவு வாங்குவதற்கு நடவடிக்கை எடுத்தாரா? இல்லையா? என எடப்பாடி சொல்லட்டும். நான் நிரூபிக்கிறேன்.

**நெறியாளர்:** அ.தி.மு.க. பொதுக்குழு பற்றி மட்டுமல்லாமல் ஏற்கனவே நடந்த பல்வேறு விஷயங்களையும் நீங்கள் சொன்னீர்கள். நீங்கள் இப்போது சொன்ன இந்த தகவல் என்பது நிச்சயமாக எனக்கே கேட்கும்போதே எடப்பாடி இவ்வளவு செய்திருக்கிறாரா என வியப்பாக மட்டுமல்ல; இன்னும் என்னென்ன செய்திருப்பாரோ என்றும் தோன்றுகிறது. இந்த நிகழ்ச்சியில் உங்களை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி நன்றி. வணக்கம்.

இவ்வாறு ஆர்.எஸ். பாரதி அவர்கள் பேட்டியளித்தார்.







# கழகமும், கலைஞரும்...

# பழமைக்கு எதிராக உருவாக்கிய நவீனம்!

■ நீரை.மகேந்திரன்



'கலைஞர் உத்தி' என்கிற ஒரு கோட்பாடு உள்ளது. கழகமும் கலைஞரும் நிகழ்த்திய புரட்சிகளில் அந்தக் கோட்பாடு பல மாயப் பணிகளைச் செய்தது எனக் கருதுகிறேன்.

உதாரணமாக வள்ளுவத்தைப் பார்க்கலாம். வள்ளுவம் இன்று கொண்டாடப்படும் சூழலுக்கு வித்திட்டவர் கலைஞர்தான் என கடந்த வாரம் தொட்டுக் காட்டியிருந்தோம். அதன் வரலாற்றைப் பார்க்கலாம். வள்ளுவத்தைத் தமிழறிஞர்கள் பலர் உயர்த்திப் பிடித்தாலும், வள்ளுவரின் உருவம் எப்படி இருக்கும் என்பதற்குப் பல குழப்பங்கள் இருந்தன.

தற்போது நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் திருவள்ளுவர் படத்துக்குத் தொடக்கம் 1959 ஆம் ஆண்டு. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் செம்மையான முறையில் திருவள்ளுவர் ஓவியத்தை வரைய வேண்டும் என எண்ணம் கொண்டு ஓவியர் கே.ஆர்.வேணுகோபால் சர்மா மூலமாக வரைகிறார். அந்தப் படத்தைத் தமிழறிஞர்கள் பார்த்து, பேரறிஞர் அண்ணா, காமராஜர், ஜீவா, கலைஞர், கண்ணதாசன், நாவலர், பேராசிரியர் என எல்லோரும் பார்த்து ஏற்றுக் கொள்கின்றனர்.

அந்தப் படத்தைச் சட்டமன்றத்தில் வைக்க வேண்டும் எனக் குரல் கொடுத்தவர் கலைஞர். அதன் பின்னர் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் பேருந்துகளில் அந்தப் படத்துடன் திருக்குறளை எழுதி வைக்கவும் ஏற்பாடு செய்கிறார். கடற்கரையில் வள்ளுவர் சிலை, கன்னியாகுமரியில் வள்ளுவர் சிலை, வள்ளுவர் கோட்டம் என வள்ளுவத்தைத் தமிழர் முன் கொண்டு சென்றது கழகமும் கலைஞரும்தான்.

1972 ஆம் ஆண்டு திருவள்ளுவர் ஆண்டை அறிமுகம் செய்கிறார். அதனோடு இணையாக 2008 ஆம் ஆண்டில், தை மாத முதல் நாளை 'தமிழருக்கான புத்தாண்டு' என அறிவிக்கிறார். தமிழறிஞர்களால் நிகழ்த்திக் காட்ட முடியாத பெருமையை கலைஞர் தனது சாமர்த்தியத்தால் நிகழ்த்துகிறார்.

'திருவள்ளுவர்தான் தமிழர்களின் முதல் தலைவர்' என்று கூறினார் பாரதிதாசன். அதற்கேற்ப வள்ளுவரை வீட்டுக்கு வீடு கொண்டு செல்லும் பணியை நிகழ்த்திக் காட்டினார் கலைஞர் . வள்ளுவத்தை உயர்த்திப் பிடித்ததும், தமிழ்ப் புத்தாண்டு குறித்து அறிவித்ததும் எதற்காக எனில், "மக்கள் மத்தியில் நிலவி இருந்த, இருக்கின்ற ஆரிய, புராண குப்பைகள், குழப்பங்களை அகற்ற" என வள்ளுவத்தை மாற்றாக முன் வைக்கிறார்.

ஆனால், தமிழர் புத்தாண்டு குறித்த கலைஞர் கண்ணோட்டத்துடன் முரண்பட்ட அம்மையார் ஜெயலலிதா, ஆரியப் பண்பாட்டுடன் தொடர்புடைய சித்திரையையே தமிழ் ஆண்டாகத் தொடரும் என அறிவித்தார். அப்போது கலைஞர் எழுதிய கடிதங்கள் பல வரலாற்றைத் தொட்டுக் காட்டும்.

ஆய்வுகள், மக்கள் ஏற்கும் சூழல், அறிவியல் கலந்த பார்வை ஆகியவற்றை உள்வாங்கித்தான் அவர் பண்பாட்டு நடவடிக்கைகளில் மாற்றுச் சிந்தனைகளைப் புகுத்தினார். அதற்காக கிடைக்கும் எந்த ஒரு வாய்ப்பையும் அவர் தவற விட்டதில்லை. அவர் எதையும் நீக்கவில்லை, எதையும் புறக்கணிக்கவில்லை. ஆனால், புதிய ஒன்றை உருவாக்குபவராக இருந்தார்.

## தமிழிலக்கியமும் கலைஞரும்...

கழகம் தோன்றியபோது, பகுத்தறிவு, சுயமரியாதை, சமூகநீதிக் கொள்கைகளை உயர்த்திப் பிடித்தாலும், தமிழிலக்கிய அறிவையும் கொண்டே எழுந்தது. நமது முன்னோடிகளின் பேச்சும் எழுத்தும் மொழி ஆளுமையும் மக்கள் மத்தியில் பெரும் தாக்கம் செலுத்துகின்றன.

தமிழிலக்கியம் சமூகச் சீர்திருத்தப் பிரச்சாரக் கருவியாக மாறுகிறது. 1948 ஆம் ஆண்டு முதல், 1963 ஆம் ஆண்டு வரை கழகத்தினர் நடத்தி வந்த இதழ்களின் எண்ணிக்கை 200-க்கு அதிகமாக இருந்தன. நூற்பதிப்பில் காட்டிய வேகம் அதிகம் என்கின்றன ஆய்வுகள்.

**தமிழ்நாட்டில் கலைஞரின்-கழகத்தின் பண்பாட்டுப் பணிகளும் அப்படித்தான், அவை தனியாக உருவம் கொள்பவை அல்ல. அவற்றுக்குள் கழகமும், கலைஞரும் நிகழ்த்திய பணிகளைக் காலம் மறுக்க முடியாது.**

பேரறிஞர் அண்ணாவின் சொற்களில் சொல்வதெனில் "இலக்கிய ஏடுகள் மக்கள் மத்தியில் மலிந்து நடமாட வேண்டுமானால், இலக்கியம் கோபுர உச்சியில் இருந்து குப்பை மேட்டுக்கு வரத் தயாராக இருக்க வேண்டும்'' எனக் குறிப்பிடுவார். இன்று இலக்கியமும் ஏடுகளும் எழுத்தும் வெளியெங்கும் நிறைந்திருப்பதற்கு தி.மு.கழக முன்னோடிகளின் இடையறாத பணியில்லாமல் சாத்தியமாகி இருக்காது என்பதை நான் நம்புகிறேன்.

கலைஞரின் பண்பாட்டு நடவடிக்கைகள் பலவும், நாகரிக சமூகத்தின் வாழ்க்கை முறையாக மாற்றம் கண்டிருப்பதைக் காணலாம். 'பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு', 'கை ரிக்ஷா ஒழிப்பு' தொடங்கி, 'திருநங்கைகளின் நல்வாழ்வு' வரை எண்ணற்றச் செயல்கள் யாவும், பண்பாட்டுப் புரட்சியின் தன்மை கொண்டவை.

நகர்ப்புறங்களின் வளர்ச்சி, கிராமப்புற மேம்பாடு, பொதுக் கல்வி, பொதுச் சுகாதாரம், பெண் உரிமை எனப் பலவும் தமிழ்நாட்டில் பண்பாட்டு மாற்றங்களை நிகழ்த்தியவைதான்.

எதிர்காலம் தகவல் தொழில்நுட்பத்தில்தான் இருக்கிறது என அவர் காட்டிய முனைப்புதான் நமது வளர்ச்சி வேகத்தின் காரணி என்பதை மறுக்க முடியாது.

பொருளாதார சமூகத்தளங்களில் அவர் முன்வைத்த நவீன பார்வைதான் நாகரிக தமிழ்நாட்டின் எதிர்காலத்தை முன் அறிவிக்கிறது.

1970 ஆம் ஆண்டு, நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வருகிறார். 5 பேர் கொண்ட குடும்பம் அதிகபட்சமாக 15 ஏக்கர் நிலம் மட்டுமே சொந்தமாக வைத்திருக்க முடியும் எனச் சட்டம் கொண்டு வருகிறார். அந்தச் சட்டத்தின் மூலம் ஒரு இலட்சத்து 78 ஆயிரம் ஏக்கர் உபரி நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, சுமார் ஒரு இலட்சத்து 37 ஆயிரம் நிலமற்ற விவசாயிகளுக்குப் பிரித்து அளிக்கப்பட்டதாகப் புள்ளிவிவரங்கள் சொல்கின்றன.

அந்த நிலங்களின் பட்டாக்களை இப்போது மக்கள், 'கலைஞர் பட்டா' என்று அழைக்கின்றனர். நிலமற்றவர்களுக்கு நில உரிமையைப் பகிர்ந்து அளித்த அந்த சட்டம் மூலம் மக்கள் வாழ்க்கைத் தரத்தை மட்டுமல்ல, கலாசார மாற்றங்களையும் நிகழ்த்திக் காட்டியவர்.

இரண்டாயிரமாண்டு நெருக்கத்தில் 'சமத்துவபுரம்' எனப் புதிய ஊர் உருவாக்கத்தை அவர் சிந்தனை முன்வைக்கிறது. 'பெண்களுக்கான சொத்துரிமை', 'பொது விநியோகத்தில் ஒரு ரூபாய்க்கு அரிசி விலை', 'சமையல் எரிவாயு அடுப்பு' என அவர் செயல்படுத்திய திட்டங்கள் அனைத்தும் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் மாற்றங்களை உருவாக்கியவை.

இலவச வண்ணத் தொலைக்காட்சி மூலம் தமிழ்நாட்டின் அடித்தள மக்கள் ஒவ்வொருவரது வீட்டிலும் தகவல் தொழில்நுட்பம் சேர்ந்தது. அதுமட்டுமல்ல, மக்களிடையே செய்திகள் தெரிந்துகொள்வதற்கான ஆர்வம் ஆகியவை பிறந்தன. இப்படியான சமூகப் புரட்சியை நிகழ்த்தியவர் கலைஞர் எனக் குறிப்பிடுகிறார் பேராசிரியர் மு. நாகநாதன்.

திராவிடச் சிந்தனையே பழமைக்கு எதிரான நவீன சிந்தனைக் கருத்தாக்கம் என இயங்கினார் தந்தை பெரியார். அதைப் பண்பாட்டு உருவாக்கமாக முன்வைத்தார் பேரறிஞர் அண்ணா. அந்தத் திராவிடப் பண்பாட்டினை இலக்கியம், அரசியல், மக்களின் வாழ்க்கை எனப் பல தளங்களிலும் விதைத்தவராக கலைஞர் நிற்கிறார்.

கழகத்தின் பணிகள், கலைஞரின் பணிகள் எனத் தொட்டு எழுதினாலும் அவை, தனியாக உருவம் கொள்ளாதவையாக உள்ளன. கலைஞரின் எழுத்துகள் குறித்து, பேராசிரியர் அவர்கள் ஒரு இடத்தில் குறிப்பிடுவதுபோல, "கலைஞர் தனது வரலாறு என நினைத்து எழுதினாலும், அவை தமிழ்நாட்டின் வரலாறு, மொழியின் வரலாறாக இருக்கிறது. அவருடைய வரலாறு தனி வரலாறாக இருக்கமுடியாத நிலை உருவாகிவிட்டது'' என்கிறார்.

தமிழ்நாட்டில் கலைஞரின்-கழகத்தின் பண்பாட்டுப் பணிகளும் அப்படித்தான், அவை தனியாக உருவம் கொள்பவை அல்ல. அவற்றுக்குள் கழகமும், கலைஞரும் நிகழ்த்திய பணிகளைக் காலம் மறுக்க முடியாது.

## திராவிட இயக்க இதழ்கள் -'தமிழ்த்தென்றல்'




விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த வி.வி.ராமசாமி என்பவர் சுயமரியாதை இயக்கத்தின் நிறுவனத் தலைவர்களில் ஒருவர். தந்தை பெரியாருடன் இணைந்து பணியாற்றியவர். தனது திருமணத்தின் போது, புரோகிதர்களை மறுத்து, சுயமரியாதை வழி மணம் செய்து கொண்டார். அவரே ஆசிரியராக இருந்து தொடங்கிய இதழ் இது.

1947 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த இதழின், முதலாமாண்டு மலர்தான் படத்தில் காண்பது. 'முத்தமிழ்ச் சித்திரமலர்' என்ற வாசகத்துடன் வெளிவந்த இந்தச் சிறப்பு மலர் தந்தை பெரியார், ஞானசவுந்தரி, தெ.பொ.மீனாட்சி சுந்தரம், ரசிகமணி டி.கே.சி, கி.ஆ.பெ. விசுவநாதம், ரா.பி. சேதுப்பிள்ளை, டி.கே. சண்முகம், கோவைக் கிழார் போன்ற தமிழறிஞர்களின் படைப்புகளுடன் வெளிவந்துள்ளது.

ஒவ்வொரு பக்கத்திலும் தமிழ் எண்களே பக்க எண்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. 204 பக்கம் கொண்ட இந்தச் சிறப்பிதழ், சுத்தானந்த பாரதியாரின் தமிழ் வாழ்த்துடன் தொடங்குகிறது.

## :ப்ளாஷ்பேக்






## வேலி போட்டார்!



சுரேஷ்

1990 ஆம் ஆண்டு, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியின் வெள்ளி விழாவை முன்னிட்டு நம் தலைவர் அன்றைய முதல்வர் கலைஞர் விழாவை சிறப்பிக்க வருகை தந்திருந்தார். அப்போது கல்லூரியில் நான் மாணவர் தலைவராக இருந்தேன். விழாவில் எனக்குப் பேச வாய்ப்பு கிடைத்ததும் கலைஞரிடம், 'எங்கள் கல்லூரிக்கு வேலி (காம்பவுண்ட்) அமைத்துத் தாருங்கள்' என்று கோரிக்கை வைத்தேன். கலைஞர் தனது உரையின்போது அவருக்கே உரிய நகைச்சுவை உணர்வோடு, "ஊருக்கே வேலி (திருநெல்வேலி) இருக்கிறதே, கல்லூரிக்கு எதற்கு என்று விட்டுவிட்டார்கள் போலும்" என்றார். கேட்டதற்கு இணங்கச் செய்தும் கொடுத்தார்.

**-டாக்டர். சுரேஷ், நாகர்கோவில்**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி :அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### திராவிட நாட்டில் கலைஞரின் முதல் படைப்பு

**1942-இல் திராவிட நாடு ஏட்டை அண்ணா தொடங்கினார். அண்ணாவின் வீரியமிக்க எழுத்துக்களால் 'திராவிட நாடு' இதழ் இளைஞர்களால் அதிகம் ஈர்க்கப்பட்டது. அந்த ஆண்டில் பள்ளி இறுதி வகுப்பு மாணவராக இருந்த கலைஞர் "இளமைப்பலி" என்ற கட்டுரையை திராவிட நாடு ஏட்டுக்கு அனுப்பி வைத்து, 3 அல்லது 4-வது இதழிலேயே பிரசுரமானதால் மிகப்பெரிய அளவில் மகிழ்ச்சிகொண்டார். அப்போது அன்பழகன், நாவலர், பாரதிதாசன் போன்றோரின் படைப்புகள் கூட திராவிட நாடு ஏட்டில் இடம்பெற்றிருக்கவில்லை.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 347




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131